உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௪.] தாதுஸ்ரீ கார்த்திகைமீ [பகுதி-௧.

Vol. 34. *November—December 1936.* No. 1.

உள்ளுறை.

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1936.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No 54, New Jail Road Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

	I சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*7.	தோத்திரத்திரட்டு			
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
*	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
*9.	அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (லெக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௪.] தாதுஸூ கார்த்திகைமீ [பகுதி-௧.
Vol. 34. November—December 1936. No. 1.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௩௩-ஆம் தொகுதியின் ௩௨௬-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இனி, நியாயப்பிரவேசத்தில் இல்லாமல், மணிமேகலையில் உள்ள பிரமாணநிரூபணப்பகுதி ஆராயப்படும்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்பதுபற்றி, வீடுபேறடையவிரும்பிநின்ற மணிமேகலை, அறவணவடிகளை வணங்கி, "அடிகள் மெய்ப்பொருள் அருளுக" என்றாட்கு, அம் மெய்ப்பொருளுணர்வுபிறத்தற்கு இன்றியமையாத பிரமாணங்களை நிரூபிக்கத்தொடங்கி, முதலில் அளவைகள் (-பிரமாணங்கள்) இத்துணையவென்கிறார்,

"ஆதி சினேந்திர னளவை யிரண்டே" (௨௬; ௭௭.)

என்று.

இதன்பொருள்: 'புத்தசமயகுருகுலத்தலைவரான சினேந்திர தேவராற் சொல்லப்பட்ட ஞானகாரணமாயுள்ள அளவைகள் இரண்டேயாம்' என்றவாறு.

'அளவை' என்றது பிரமாணசப்தத்தின் பரியாயமாய் ஞான சாதனம் என்னும் பொருளுணரநின்றது. *அளத்தற்குக்கருவி அளவையெனப்பட்டது.

'இரண்டே' என்னும் ஏகாரம் பிரிநிலை, தேற்றம் என்னும் இருபொருள்படநின்றது. அளவைகள் †பத்து, எட்டு, ஆறு என்னும் சமயக்கணக்கர்கோட்பாடுபற்றிய எண்வேறுபாடுகளினின்றும் பிரித்து இரண்டென்றமையால் பிரிநிலையாயிற்று. ‡"கண்கூடல்லது கருத்தள வழியும்" (உஎ; உஎச) என்ற பூதவாதி கொள்கையை மறுத்துக் கருத்தளவையைச் சேர்த்துக்கொண்டமையால் தேற்றமுமாயிற்று; ஆகவே பிரமாணங்கள் இத்துணைய வென வரையறுத்துக்கொண்டதாயிற்று.

இனி, அவ்வளவைகள் இவையென அவற்றின் பெயர் கூறுகின்றார்,

"ஏதமில் பிரத்தியங் கருத்தள வென்ன" (உ.கூ; சஅ.) என்று.

இதன்பொருள்: அவ்வளவைகளின்பெயர் குற்றமற்ற, பிரத்தியக்ஷமும், அநுமானமும் ஆம் என்றவாறு.

அவ்வளவைகளின்பெயர் என்னும் எழுவாய் இடம்நோக்கி வருவித்துரைக்கப்பட்டது; தொகைசொல்லியபின் அவற்றின் பெயர்சொல்லுதல் முறையாதலால்.

'ஏதமில்' என்பதனைக் கருத்தளவோடும் கூட்டுக; 'ஏதமில்' என்ற பொருளடை, சொற்பொருளொற்றுமையாற் பெயர்மேலதாயிற்று.

---

*அளத்தலாவது இஃது இற்று என வரைந்தறிதல். அதாவது: நாழியால் குறுணியை அளத்தல்போல வியாப்பியத்தால் வியாபகத்தை வரைதல். வியாப்பியம் - குறைநிலை; வியாபகம் - மிகுநிலை. பிரமாணம் வியாப்பியமாயும், பிரமேயம் வியாபகமாயும் இருத்தலால் வியாபகத்தை வரைந்தளக்கும் பிரமாணம் அளவை எனப்பட்டது.

†"வேத வியாதனுங் கிருத கோடியும்
ஏதமில் சைமினி யெனுமிவ் வாசிரியர்
பத்தும், எட்டும், ஆறும், பண்புறத்
தத்தம் வகையாற் றம்பகர்ந் திட்டனர்" (உஎ; ரு-அ.)

‡ கண்கூடு—இந்திரிய விடய சம்பந்தம்; இது காண்டல் அளவைக்குப் பெயராயிற்று.

'என' என்னும் எண்ணிடைச்சொல் என்ன எனத் திரிந்து பிரத்தியத்துடனும் இயைந்துநின்றது.

ஆக்கச்சொல் வருவித்து வினைமுடிவுசெய்யப்பட்டது.

'பிரத்தியம்' என்பது பிரத்தியக்ஷம் என்னும் வடமொழித் திரிபாய்க் காண்டலளவைக்குப் பெயராயிற்று.

பிரத்தியக்ஷம் என்பதில் அக்ஷிசப்தம் உபலக்ஷணமாய் இந்திரியங்களையுணர்த்தி, தொறுப்பொருளுணர்த்தும் 'பிரதி' என்னும் உபசர்க்கத்துடன்கூடி, பிரதிதினம் என்பதுபோல, ஒவ்வோரிந்திரியமும் என்னும் பொருளுடையதாயிற்று.

இங்ஙனம் சொற்பொருள்விரித்தலால் இந்திரியங்களே பிரத்தியக்ஷப்பிரமாணம் (காண்டலளவை) என்பது பெறப்பட்டது.

இந்திரியங்களாவன:—முறையே சத்தம், பரிசம், உருவம் (நிறம்), இரதம் (சுவை), கந்தம் என்னும் இவற்றைக் கவர்தற்குரிய செவி (சுரோத்திரம்), மெய் (துவக்கு), கண் (சக்ஷுஸ்), நா (சிங்குவை), மூக்கு (கிராணம்) என்பனவாம். இவை பகிரிந்திரியம் எனப்படும். இவை புறக்காட்சிக்குப்பிரமாணம். இவற்றின்வேறுயுள்ள மனம் என்பதும் ஓரிந்திரியமாம்; இது அந்தரிந்திரியம் எனப்படும். இது அகக்காட்சிக்குப் பிரமாணமாம்.

இவ் வறுவகைப்பிரமாணத்தாலும், உண்டாகும் ஞானங்களையும், பிரத்தியக்ஷம் என வழங்குவர் வடநூலார்; தமிழர் பிரத்தியக்ஷப்பிரமாணத்தைக் 'காண்டல்' என்றும், அதனால் உண்டாகும் உணர்வைக் 'காட்சி' என்றும், வெவ்வேறுபெயரிட்டும் வழங்குவர். அம்முறையானே இந்நூலாசிரியரும் பிரத்தியக்ஷப்பிரமாணத்தைக் 'காண்டல்' என்றும், அதனாற்றோன்றும் உணர்வைக் 'காட்சி' என்றும், அக்காட்சி ஐந்துவகைப்படுமென்றும் அளவைவாதியர் கூற்றாகக்கூறினர். அக்காட்சியுள்,

1 கண்ணால் வண்ணத்தைக் கண்டறிதலும்
2 செவியால் ஓசை கேட்டறிதலும்
3 மூக்கால் நாற்றம் மோந்தறிதலும்
4 நாவாற் சுவை சுவைத்தறிதலும்
5 மெய்யாற் பரிசம் உற்றறிதலும்

ஆகிய இவ்வைவகை யுணர்வும் 'புறக்காட்சி' எனப்படும்.

6 மனத்தால் இன்பதுன்பங்களையுணர்தல் அகக்காட்சி யெனப்படும்.

இவ்வறுவகைக்காட்சியுணர்விற்கும் முறையே கண்முதலிய அறுவகை இந்திரியங்களும் பிரமாணமாகும்; இவ்விந்திரியங்கள் பிரமாணமாங்கால் அவ்விந்திரியங்களுக்கும் அவற்றால் அறியக் கிடக்கும் பொருள்களுக்கும் உள்ள சம்பந்தம் (தொடர்பு) வியா பாரம் எனப்படும். இத்தொடர்பினைக் 'கண்கூடு' என்றும் அதுவே காண்டலளவையென்றும் கூறுவர் ஒருசாரார்.

இத்தொடர்பு சையோகமும், சையுத்தசமவாயமும், சையுத்த சமவேதசமவாயமும், சமவாயமும், சமவேதசமவாயமும், விசேடணவிசேடியத்தன்மையும் என அறுவகைப்படும். இச்சம் பந்தங்களாகிய தொடர்பு ஒன்றுமின்றிக் காட்சியுணர்வு தோன் றாது. இவற்றின் விளக்கம் தருக்கநூல்களுட் காண்க. ஈண்டுரைப் பின் விரியும்.

பிரத்தியக்ஷப்பிரமாணத்துக்கு ஏதங்களாவன:—உயிர் பொறி மனம் இவை ஊறுபடுதலும், பொருள் இடம் முதலியன பழு தாதலுமாம்.

கருத்தளவுக்கு ஏதங்களாவன:—பின்னர் பக்கப்போலி, ஏதுப் போலி, திட்டாந்தப்போலி இவற்றின் இலக்கணங்களாற் சொல்லப் படுவன.

இப் பிரத்தியக்ஷப்பிரமாணத்தையும் அனுமானப்பிரமாணத் தையும் வழங்கும் பெயர்களும் முறையே பிரத்தியக்ஷமும் அனு மானமும் ஆம் என்பார் ஏதமில் பிரத்தியம் கருத்தளவு என்றார்.

இங்ஙனங்கூறியவாற்றால் இக்குற்றங்கள் நீங்கிய பிரத்தியக்ஷ மும் அனுமானமும் ஆகப் பிரமாணங்கள் இரண்டே கொள்ளத் தக்கவை என்பதாயிற்று.

இனி, இப்பிரமாணங்களால் தோன்றும் உணர்வுகள் இவை யெனக் காட்டத்தொடங்கி முதற்கண் பிரத்தியக்ஷப்பிரமாணத் தால்தோன்றும் உணர்வு இதுவென்கிறார்,

"சுட்டுணர் வைப்பிரத் தியக்க மெனச்சொலி
விட்டனர்................................" (உகூ; சகூ—ரு0)

என்று.

இதன்பொருள்: ஒரு தனிப்பொருளைப்பற்றி இஃது என்னும் வாய்பாட்டளவே தோன்றும் சுட்டுணர்வைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தாற்றோன்றும் உணர்வு என்று சொல்லியொழித்தார் ஆசிரியர் என்றவாறு.

சுட்டுணர்வாவது: இன்னதென அறிவித்தற்கு அதன் இயல்பு குறித்த சுட்டு என்னும் அடையால் விசேடித்து உரைக்கப்பட்டது.

ஈண்டு, 'பிரத்தியக்கம்' என்றது, இந்திரியந்தோறும் நிகழ்வது என்னும் பொருளுடையதாய், பிரத்தியக்கம் என்னும் ஞானத்தை உணர்த்துகிறது; சுட்டுணர்வு என்பதனோடு இயைதற்கு உரியது ஞானமாதலான் என்க.

சுட்டுணர்வாவது: இவன் இவள் இவர் இது இவை என்னும் வாய்பாட்டு ஒருமொழிச்சொற்களால் உணர்தற்குரிய தனிப்பொருளுணர்வு. அவை, ஆண் பெண் ஒன்று பல ஆ குதிரை எனத் தோன்றும் உணர்வுகள்போல்வன.

இவ்வுணர்வு பயனிலையான் விசேடிக்கப்படாது அவ்வப் பொருண்மைமாத்திரையே சுட்டிநிற்றலால், சுட்டுணர்வு எனப் பட்டது; சுத்தஞானம் எனினும் சுட்டுணர்வெனினும் ஒக்கும். சுத்தம் எனினும் தனித்தது எனினும் ஒக்கும்.

சுட்டுணர்வு தனிப்பொருளுணர்வு என்பதை,

"..............சுட்டுணர்வெனப்படுவது
எனைப்பொருளுண்மை மாத்திரை காண்டல்"

(உஎ; சுக–சுஉ)

என்னும் அளவைவாதிகூற்றானும் அறிக.

பயனிலைமுதலியவற்றால் விசேடிக்கப்படாத தனிப்பொருளுணர்வால் (சுட்டுணர்வால்) பொருட்பேறு இல்லாமையால் அதனைப் பிரமாணபாசம் (ஞானபாசம்) என்பர் அளவைவாதியர். [இங்கு, பிரமாணம் என்றது, பிரமாணத்தால் உதிக்கும் ஞானத்துக் குப் பெயராயிற்று.]

சுட்டுணர்வாற் பொருட்பேறில்லாமையானும், ஞானபாச மாகையானும், அதனைச் சுருங்கச்சொல்லி ஒழித்தார் என்பது தோன்ற, 'சொல்லிவிட்டனர்' என்றார்.

சுட்டுணர்வு பிரத்தியக்ஷஞானம் என்முராயினும் இடம் நோக்கிப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் தோன்றுவது சுட்டுணர்வு என்பதே கருத்தாகக்கொள்க.

இங்ஙனங் கூறியவாற்ருல் சுட்டுணர்வுக்குக் காண்டலளவையே பிரமாணம் என்பது பெறப்பட்டது.

இனி, இச்சுட்டுணர்வுக்கு இனமாயுள்ளது தொடர்பொருளுணர்வு (விசிஷ்டஞானம்) ஆதலால் அதற்குப் பிரமாணம் இவை என நிரூபிக்கிருர்,

"...............நாம சாதிகுணக் கிரியைக்ண்
மற்றவை யனுமா னத்துமடையு மென்க."
(உகூ; ருo–ருக)

என்று.

இதன்பொருள்: முன்சொல்லப்பட்ட சுட்டுணர்வோடு நாமம் சாதி குணம் கிரியை உணர்வுகளும், பிறவுணர்வுகளும் தனித்தனி கூடிய தொடர்பொருளுணர்வுகளைப் பிரத்தியக்ஷப் பிரமாணத்தாலாயினும் அனுமானப்பிரமாணத்தாலாயினும் ஒருவன் அடையும் என்றவாறு.

[தொடர்பொருளுணர்வு – விசிஷ்டஞானம்; அது சாத்தன் வந்தான், மலை நெருப்புடைத்து, சத்தம் அநித்தம் என்பன போலும் உணர்வுகள்.]

சுட்டுணர்வு என்பதை அதிகாரத்தால் வருவித்து மூன்ற னுருபுகொடுத்து விரித் துரைவரையப்பட்டது.

"நாமசாதிகுணக்கிரியை; மற்றவை" என்பன அவற்ருனும் தொடர்பொருளுணர்வை யுணர்த்திநின்றன; அதிகாரம் உணர்வு பற்றிநிற்றலான் என்க.

'மற்றவை' என்றதனுல் பொருள் இடம் காலம் சினை முதலியனவும் கொள்ளப்படும். கொள்ளவே அவற்ருனும் தொடர்பொருளுணர்வையும் பிரத்தியக்ஷத்தாலும், அனுமானத்தாலும் ஒருவன் அடையும் என்பதும் பொருளாயிற்று.

இவ்வுணர்வுகள், 'அடையும்' என்னும் வினைக்குச் செயப்படு பொருளாயின.

'அநுமானத்தும்' என்னும் அத்தும், உம்மையும் அதிகாரத் தான் வந்த பிரத்தியக்கத்துடனும் கூட்டி மூன்றனுருபு விரித்துப் பிரத்தியக்கத்தானும் அநுமானத்தானும் எனப் பொருளுரைக்கப் பட்டது.

'அடையும்' என்னும் பயனிலைக்கேற்ப ஒருவன் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட்டது; ஒருத்தி ஒன்று என்னும் ஏனைப் பாற்கும் பொருந்தப் பொதுவினையால் அடையும் என்றார்.

'என்க' என்றது அசைநிலையாய்நின்றது. என்னக்கடவது எனினுமாம். 'என' என்பதே பாடமாயின், 'சொல்லிவிட்டனர்' என்பதை அதிகாரத்தால் வருவித்துக் கூட்டி, எனச் சொல்லி விட்டனர் என முடிக்க.

ஈண்டு, 'சொல்லிவிட்டனர்' என்பது ஒருசொல்லாய்த் தேற்றப்பொருள்பட்டுநின்றதெனக்கொள்க. இத்தேற்றத்தாற் கீழ்ச்சொல்லிய விடயங்களில் பிறர்மதவேறுபாடுகளை மறுத்துத் தம் துணிபுநாட்டினர் என்பது குறிப்பாகும்.

இங்ஙனங்கூறியவாற்றால், நாம, சாதி முதலியவற்றால் விசேடிக்கப்பட்ட தொடர்பொருளுணர்வை ஒருவன் பிரத்தியக்கத் தானும் அநுமானத்தானும் அடையும் என்றாராயினும், இது பிரமாணநிரூபணப்பிரகரணமானமையால், ஒருவன், நாம சாதி முதலியவற்றால் விசேடிக்கப்பட்ட தொடர்பொருளுணர்வை அடைதற்கு, பிரத்தியக்ஷமும் அநுமானமும் பிரமாணமாம் என்பதே கருத்தாகக்கொள்க.

இத் தொடர்பொருளுணர்வுகளுக்குத் தனித்தனி உதாரணம் வருமாறு:—

நாமத்தால் விசேடிக்கப்பட்டது இவன் சாத்தன் என்னும் உணர்வு.

சாதியால் விசேடிக்கப்பட்டது இவன் பார்ப்பான் என்னும் உணர்வு.

குணத்தால் விசேடிக்கப்பட்டது கொற்றன் கரியன் என்னும் உணர்வு.

கிரியையால் விசேடிக்கப்பட்டது இவன் உழவன் என்னும் உணர்வு.

பொருளால்விசேடிக்கப்பட்டது மலைநெருப்புடைத்துஎன்னும் உணர்வு.

இடத்தால் விசேடிக்கப்பட்டது சேரன் மலையன் என்னும் உணர்வு.

காலத்தால் விசேடிக்கப்பட்டது சோழன் ஐயாட்டையான் என்னும் உணர்வு.

சினையால் விசேடிக்கப்பட்டது விநாயகன் ஐங்கரன் என்னும் உணர்வு.

இன்மையான் விசேடிக்கப்பட்டது முயற்குக் கோம்பில்லை என்னும் உணர்வு.

பிறவும் இவ்வாறே வரும். இவை பயனிலையான் விசேடிக்கப் பட்டன.

யானைக்கோடுமுதலிய அடைமொழியால் விசேடிக்கப்பட்டன ஒருமொழிப்பொருளுணர்வாய்ச் சுட்டுணர்வாமாதலால் அவை ஈண்டைக்கு ஏலாவென்க.

இனி அவ்வனுமானப்பிரமாணத்தின் தொகையும் பெயரும் அநுவாதமுகத்தால் தோற்றுவித்துக்கொண்டு அவற்றின் இயல்பு கூறுகிறார்,

* "காரிய காரண சாமா னியக்கருத்து
ஓரிற் பிழைக்கையு முண்டு......" (உகூ; ருஉ-ருங) என்று.

இதன்பொருள்: கீழ்ச்சொல்லப்பட்ட அனுமானமானது துணிபொருளின் காரியப்பொருள் ஏதுவாதல்பற்றிக் காரியானு மானம் எனவும், துணிபொருளின் காரணப்பொருள் ஏதுவாதல் பற்றிக் காரணானுமானம் எனவும், துணிபொருளோடு ஒருநிலைக் களத்தில் (சமானாதிகரணத்தில்) உடனிகழ்பொருள் ஏதுவாதல் பற்றிச் சாமானியானுமானம் எனவும் மூன்றுவகைப்படும்; அவற்றை ஆராய்ந்துபார்க்குமிடத்தில் அவற்றுள், ஒருசில தவறுவன வும் உளவாம்; ஒருசில தவறாதனவும் உளவாம் என்றவாறு.

கீழ்ச்சொல்லப்பட்ட அனுமானம் என்னும் எழுவாய் இடம் நோக்கி அதிகாரத்தால் வருவித்துரைக்கப்பட்டது.

'சொற்பொருள்விரித்தல்' என்னும் உத்தியால் மூவகை அனுமானங்களுக்கும் பெயர்க்காரணம் விரித்துரைக்கப்பட்டது.

---

* மேல், 'கனலிற் புகைபோற் காரியக்கருத்தே' (உகூ; ருச) எனவும், 'தூயகாரிய வேதுச்சுபாவம் (உகூ; சூஅ) எனவும், நிறுத்தமுறைபற்றிக் காரியக்கருத்தே தொடங்கப்பட்டிருத்தலாலும், பிறவாற்றானும் 'காரிய காரண சாமானியக்கருத்'தென்று பாடங்கொள்ளப்பட்டது.

கருத்து என்பதனைக் காரியகாரணங்களுடனும் தனித்தனி கூட்டிக் காரியக்கருத்து காரணக்கருத்து சாமானியக்கருத்து எனப் பெயராக்கிக்கொள்க.

இப்பெயர்கள் முன்பே பெறப்பட்டனபோலக்கொண்டு எழுவாயாகநிற்கவைத்தமையால் அநுவாதமுமாயிற்று.

'கருத்து' எனினும் அனுமானம் எனினும் ஒக்கும். 'கருத்தும்' என்னும் எண்ணும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது.

உம்மை யெண்ணால் மூன்றுவகைப்படுமென்பதாயிற்று. இவ்வாற்றான் எண்ணுப்பெயரும் அநுவாதத்தால் ஈண்டே பெறப்பட்டது. உடம்பொடுபுணர்த்தலாலுமாம்.

ஓரின் என்றமையால், ஆராய்ச்சியில்லாதார்க்கு அவை பிழைக்குமாறு தோன்றாது என்றவாறாயிற்று.

பிழைக்கையுமுண்டு என்ற எதிர்மறையும்மையால், பிழையாமையுமுண்டு என்பது பெறப்பட்டது.

பிழைக்கையும், பிழையாமையும் ஒருநிலைக்களத்திராமையால் அவை ஒருசில என்று பொருளுரைக்கப்பட்டது.

பிழைக்கை பிழையாமை என்னும் பண்பின்பெயர்கள் அப்பண்புடைய அநுமானங்களுக்கு ஆனமையால் ஆகுபெயர். இதனால் அவை பிழைப்பனவும், பிழையாதனவுமாயுள்ளன என்பதாம்.

இனி, பிழைப்பனவும் பிழையாதனவும் ஆகிய கருத்தளவைகளுள், பிழைப்பனவற்றை முன்னமே அளவைவாதிகூற்றினுட் கேட்டு, (27; 25—40) 'செவ்வி தன்மையிற் சிந்தையில் வைத்திலேன்; (29; 44) என்றாளாதலின், அவற்றை ஈண்டுக் கூறவேண்டாமையால் ஒழித்து, ஏனைப் பிழையாத கருத்தளவை இவையெனத் தொகுத்துணர்த்துகிறார்,

"......................பிழையாதது
கனவிற் புகைபோற் காரியக் கருத்தே" (உகூ; ருங.—ருச)

என்று.

இதன்பொருள்: நெருப்பு உள்ளது எனத் துணியுமிடத்து அந்நெருப்பின்காரியமாகிய புகைபோலத் துணிபொருளின் வியாப்பியமாயுள்ள பொருள் யாது, அதனை ஏதுவாகக்கொண்டு

அதன்காரணப்பொருள் உண்டு என்று துணிதற்குரிய காரியானுமானங்கள்போல்வன பிழையாதகருத்தளவைகளாம் என்றவாறு.

பிழையாதது என்றது தொகுதியொருமை.

கனலில் என்றது விடயசத்தமியாய்க் கனல் உண்டெனத் துணியுமிடத்தில் என்னும் பொருள்படநின்றது.

போல் என்றது காரியத்துக்கு அடையாயிற்று. இவ்வுவமையால் புகைபோலும் வியாத்தியுள்ள காரியானுமானங்கள் கொள்ளப்பட்டன; வியாத்தியில்லன விலக்கப்பட்டன.

காரியக்கருத்து என்றது உபலக்ஷணமாதலால், 'காரியக் கருத்துப்போல்வன' எனப் பொருளுரைக்கப்பட்டது.

இவ்வுவமையால், சாதநதன்மம் (ஏதுப்பொருள்) வியாப்பியமாயும், சாத்தியதன்மம் (துணிபொருள்) வியாபகமாயும் உள்ள பிற அநுமானங்களும் பிழையாதனவாம் என்பது பெறப்பட்டது.

பெறவே, துணிபொருளின் வியாப்பியமான காரணப் பொருளை ஏதுவாகக்கொள்ளும் காரணானுமானங்களும், துணி பொருளின் வியாப்பியமான உடனிகழ்பொருளை ஏதுவாகக் கொள்ளும் சாமானியானுமானங்களும் பிழையாத நல்லனுமானங்களாம் என்றவாறாயிற்று. இவற்றிற்கு உதாரணங்கள் பின்பு காட்டப்படும்.

ஏகாரம்-ஈற்றசை; தேற்றமெனினுமாம். பிரிநிலையன்று. பிரிநிலையாகக்கொள்ளின், வியாப்தியுள்ள காரணானுமானங்களும், சாமானியானுமானங்களும் விலக்கப்பட்டனவாயொழிதலால் மாறுபடக்கூறலாம்.

**

இனி, பிரிநிலை இரண்டுவகைப்படும். முழுதும் பிரிநிலை, உடனிகழ்பிரிநிலை என. முழுதும்பிரிநிலைக்கு உதாரணம்:— உண்மை இன்மைகள்; இவை சிறிதும் ஒருநிலைக்களத்திராது வேற்றுநிலைக்களம்பற்றியேநிற்றலால் முழுதும் பிரிநிலையாயின. உடனிகழ்பிரிநிலைக்குதாரணம்:— உயர்திணைப்பெயரும் அஃறிணைப் பெயரும். இவை உயர்திணை அஃறிணைகளில் தனித்தனி பிரிந்தும் இருதிணைப்பொதுவில் உடனிலையாயுமிருத்தலால் உடனிகழ்பிரிநிலையாயின. இவ்விருவகைநிலையும் ஏது சாத்தியங்களுக்கு இருக்கலாகாது.

வியாப்பியம்—குறைநிலை. வியாபகம்—மிகுநிலை.

குறைநிலையாவது—ஏது, துணிபொருளுடைமையிற் குறைநிலமுடையதாதல்; அதாவது: புகையுடைமையாகிய ஏது நெருப்புடையநிலமுழுதுமின்றி அதன் ஏகதேசத்திருத்தல்.

இதனை, துணிபொருளாகிய நெருப்பு இருக்கும் இடங்களான பழுக்கக்காய்ச்சிய இரும்பு, செந்தழல், பாகசாலை, சூளை முதலிய இடங்களுள், ஏதுப்பொருளாகிய புகை பழுக்கக்காய்ச்சிய இரும்பினும் செந்தழலினும் இன்றி, சூளையினும், பாகசாலையினும் உண்மையால் அப்புகை, நெருப்பிற்குக் குறைநிலை (வியாப்பியம்) ஆயிற்று.

இதற்கு மறுதலையாக நெருப்பு, புகையில்லாத பழுக்கக் காய்ச்சிய இரும்புமுதலியவற்றிலும் உண்மையால் அது புகைக்கு மிகுநிலை (வியாபகம்) ஆயிற்று.

இவ்வாறே சாதந சாத்தியங்களின் வியாப்பிய வியாபகநிலைகள் (குறைநிலை, மிகுநிலைகள்) அறிந்துகொள்ளத்தகும். இவற்றுள் துணிபொருள் மிகுநிலையாயும், ஏது குறைநிலையாயும் இருக்க வேண்டும். இரண்டும் சமநிலையாயும் இருக்கலாம்; ஏது மிகுநிலையாயிருத்தல் கூடாது.

சமநிலையாவது: ஏதுவுள்ளநிலத்தெல்லாம் துணிபொருளும், துணிபொருளுள்ளநிலத்தெல்லாம் ஏதுப்பொருளும் குறைநிலை மிகுநிலையின்றித் தவறாதிருத்தல்.

இதற்கு உதாரணம்: 'இறப்புடையரெல்லாம் பிறப்புடையர்; பிறப்புடையரெல்லாம் இறப்புடையர்' என்பதில் இறப்பும் பிறப்பும் ஒன்றைவிட்டொன்று பிரியாது சமநிலையானவாறு காண்க.

வியாப்தியாவது:—பிறழாவுடனிலை; அதாவது ஏதுப்பொருள் தானிருக்குமிடத்துள்ள துணிபொருளைவிட்டுப் பிரியாதிருத்தல். இதுவே ஏதுவின் இலக்கணமாம்.

இவ்வாறு பிரத்தியக்ஷப்பிரமாணத்தையும், அனுமானப்பிரமாணத்தையும் நிரூபிக்கவே உவமானம் முதலிய மற்றை அளவைகள் என்னும்? என்னும் சங்கையைப் பரிகரிக்கிறார்,

"ஏனை யளவைக ளெல்லாங் கருத்தினில்
ஆன முறைமையின் அனுமான மாம்பிற" (உகூ; ருரு—ருசு)

என்று.

இதன்பொருள்: பிரத்தியக்ஷமும் அநுமானமும் ஒழிந்த மற்றை அளவைகளெல்லாம் ஆராய்ச்சியாற் பொருளுணர்த்தும் முறைமையாலே அநுமானத்துள்ளே அடங்கும் என்றவாறு.

கருத்து - ஆராய்ச்சி. பிற—அசைநிலை.

ஏனை அளவைகளாவன: உவமமும் ஆகமமும், அருத்தாபத்தியும், இயல்பும், ஐதிகமும், அபாவமும், மீட்சியும், உள்ளநெறியும், என்பனவாம். இவற்றை, மணிமேகலையுள் உ௭-ஆம் பாட்டினுள் அளவைவாதிகூற்றிற் பின்வருமாறுகூறுதலான் அறிக. அவை வருமாறு:—

(1) "உவம மாவது ஒப்புமை யளவை
கவய மாவாப் போலுமெனக் கருதல்"

(2) "ஆகம வளவை அறிவன் நூலால்
போக புவனம் உண்டெனப் புலங்கொளல்"

(3) "அருத்தா பத்தி ஆய்க்குடி கங்கை
இருக்கு மென்றால் கரையிலென் றெண்ணல்"

(4) "இயல்பு யானைமேல் இருந்தோன் றோட்டிக்கு
அயலொன் றீயாது அதுவே கொடுத்தல்"

(5) "ஐதிக மென்பது உலகுரை இம்மரத்து
எய்திய தோர்பேய் உண்டெனத் தெளிதல்"

(6) "அபாவ மென்பது இன்மையோர் பொருளைத்
தவாது அவ்விடத்துத் தானிலை யென்றல்"

(7) "மீட்சி யென்பது இராமன்வென் றானென
மாட்சியி லிராவணன் றோற்றமை மதித்தல்"

(8) "உள்ளநெறி யென்பது நாராசத் திரிவில்
கொள்ளத் தகுவது காந்தமெனக் கூறல்" (சக—நசுரு)

என்பனவாம்.

இவையெல்லாம் ஆராய்ச்சியடியாகப் பொருளுணரப்படுதலால் அநுமானத்துள் அடங்குமென்றார்.

இனி அநுமானமாமாறு கூறப்படும்.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கூக-ஆம் தொகுதியின் உஅசு-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பிணிவீட்டு படலம்

இந்திரசித்து, அநுமானைப் பிரமாத்திரத்தினுற் கட்டியிருந்த கட்டை நீக்கியதைக் கூறுவது. (கட்டைநீக்கி யென்ற பொருளில் 'பிணியைவீட்டி' என மிதிலைக்காட்சிப்படலம் கூசு-ல் வருதல் காண்க.)

கட்டுண்ட அநுமானைக் கண்ட இராக்கதர் பேச்சும் செயலும்

[கட்டுண்டிருந்த அநுமானைக் கண்ட அரக்கரில் பலர், 'இவனைத் தப்பவிட்டால், எல்லாரையுங் கொன்றிடுவான்; அம்பால் எய்யுங்கள்; கல்லால் எறியுங்கள்; கத்தியால் வெட்டுங்கள்; உடலைப் பலகூறுபடுத்துங்கள்; தரையிலிட்டு அரையுங்கள்' என்றுர்கள். பலர், 'இந்தப்பயலை இத்தனைநேரம் உயிரோடிருக்கவிடுவதோ! உடனே கொல்வோம்' என்று கொல்ல எத்தனித்தார்கள். பலர், 'கடலுள் அமிழ்த்துங்கள்; தீயிலிட்டுக் கொளுத்துங்கள்' என்றுர் கள். (அநுமானுல் தந்தையர் தமையர் தம்பியரை இழந்த) பலர், 'என் தந்தையைத் தந்துபோ; என் தமையனைத் தந்துபோ; என் தம்பியைத் தந்துபோ' என்று மறித்தார்கள். கணவரை இழந்த இராட்சசிகள், 'இவனைக் கொன்று இவன்தலைமேலிருந்துதான் தாலிவாங்குவோம்' என்றுர்கள்.

மரத்தைக் காண்போர் அதன்மேல் ஊரும் எறும்பொழுக்கைக் காணுதவாறு, அநுமானைக் கண்ட சில இராட்சசிகள் அவன் தீங்குசெய்ய இடமின்றி அவனைக் கட்டியிருக்கும் நாகபாசத்தைப் பாராமல், தம்மைக் கொன்றிடுவானென்று பயந்து வயிற்றிலடித் துக்கொண்டு ஊருக்குவெளியே ஓடினுர்கள்.

அனுமான் ஆலோசனை

அனுமானைக் கட்டியிருந்த பாம்பைப்பற்றிப் பக்கத்துக்கு ஐம்பதினுயிரவாக நூறுயிரம் இராட்சசகிங்கரர் இழுத்துச்சென்ருர்கள். அப்போது, அவன், 'என் தந்தை வாயுதேவனின் அன்புப் பலமும் தேவாதிபர்களும் சீதாபிராட்டியும் தந்துள்ள வரபலமும் எனக்கு இருத்தலால், இந்த நாகபாசத்தை எளிதிற் சிதைக்கவல்லேன். அது செய்யாது அடங்கியிருத்தலே இப்போதைக்கு ஏற்றது. இதனுல், இராவணனைக் காணவும், அவனும் அவனுடைய அமைச்சரும் அறிய, இராமபிரான் ஆணையால் அவன் அடையும் ஆபத்துக்களை எடுத்துக் கூறவும், அதனுல் அவன் மனஉறுதி குலைந்து சீதாபிராட்டியைச் சிறையினின்று விட்டுவிடவும் கூடும். இஃதன்றி, ஏக ராமபாணத்தினுல் ஏழு மராமரங்கள் ஒருசேர ஊடுருவப்பட்டதும் வாலிமாண்டதும் வானரசைனியமகத்துவமும் புகலுதற்கு வசதி வாய்க்கும்' என்று எண்ணிக்கொண்டு சென்ருன்.

சீதை துயரம்

அனுமான் அகப்பட்டதை அறிந்த சீதை, குஞ்சுபிடிபட்ட பறவைபோலவும் கன்றுகவரப்பட்ட பசுப்போலவும் கதறினுள். இந்திரசித்து அனுமானை இராவணன் அரண்மனைக்குக் கொண்டு போனுன்.

இராவணன்கோலு

126 தலங்கள் மூன்றிற்கும் பிறிதொரு மதிதழைத் தென்ன,
அலங்கல் வெண்குடை தண்நிழல் அவிர்ஒளி பரப்ப,
வலங்கொள் தோளினுன் மண்நின்றும் வான்உற எடுத்த
பொலங்கொள் மாமணி வெள்ளியங் குன்றெனப் பொலிய.

(இ-ள்.) (இராவணன் ஆளும்) மூன்று உலகங்களுக்கும் (பூவுலகமொன்றுக்கேயுரிய சந்திரன் போதாதென) வேருெரு சந்திரன் தோன்றினுற்போல (ச் சூழவும் முத்துச்) சரங்கள் தொங்குகின்ற (ஒற்றை) வெண் (கொற்றக்) குடை குளிர்ந்த

நிழலையும் பிரகாசிக்கின்ற ஒளியையும் பரவச்செய்யவும், (அந்தக் குடை) இராவணன் பூமியினின்று பெயர்த்தெடுத்து ஆகாயம் அளாவ மேலே தூக்கிய வெள்ளிமலைபோல விளங்கவும் (இராவணன் கொலுவிருந்தான்.)

அலங்கல்—மாலை; இங்கே குடையைச்சூழ்ந்து தொங்கக் கட்டியிருக்கும் முத்துச்சரங்களைக் குறித்தது; அசைதலென்னும் பொருளுடைய அலங்கலும் தொங்குதலென்னும் பொருளுடைய தொங்கலும், அசைதலும் தொங்குதலும் இயல்பாக உடைய மாலையை உணர்த்துதல் கவனிக்கத்தக்கது. வலம் - வலிமை; வெற்றி. பொலம் - பொன்; அழகு. 'வெண்குடைத் தண் கொடை' பாடபேதம்.

சிங்காதனத்துக்கு மேலாக அந்தரத்திலே விளங்கிய வெண்குடையின்காட்சி, இராவணன் பூமிக்குமேலாகத் தூக்கியபோது விண்ணில் விளங்கிய வெள்ளிமலையின் தோற்றம்போன்றதைக் கம்பர், கவிப்படத்தில் சொல்வருணங்கொண்டு கற்பனுசக்தித் *தூரிகையால், சித்திரகாரர் சித்திரந் ‡தீட்டுவதுபோலத் தீட்டிக் காட்டியிருப்பது, கண்டு களிக்கத்தக்கது.

இராவணன் கைலாசகிரியைப் பெயர்த்தெடுத்தவரலாறு கூறுமிடத்து, அவன் அம் மலையைத் தலைக்குமேலே தூக்கியதாகக் கூறுதலும் உளதாதலின், அங்ஙனம் உயர எடுக்கப்பட்ட வெள்ளி மலையோடு அவ் வெண்கொற்றக்குடை உவமிக்கப்பட்டது. வை. மு. கோ. குடையின் மேற்பகுதி வெள்ளிமலையையும் குடைக்காம்பு இராவணனையும் போன்றமை போதரும்.

[இராவணன்புயங்களில் திரிமூர்த்திகளின் ஆயுதவடுக்களும் காதல்மாதரின் நகவடுக்களும் காணப்பட்டன. அவன் இரத்தின கிரீடங்கள்பூண்ட பலதலைகளோடு சிங்காதனத்தில் கொலுவிருத்தல், நாகரத்தினங்களுடன் விளங்கும் பலதலைகளையுடைய

---

* தூரிகை — சித்திரம் எழுதும் குச்சு.

‡ தீட்டுதல் — எழுதுதல்; சித்திரித்தல்.

ஆதிசேடன் அரசிருத்தல்போன்றது. கரியபெரிய *காத்திரமுடைய அவன் பொன்முடிபுனைந்திருத்தல், கருங்கடல் பொன்மலையை முடியாகப்பூண்டிருத்தல்போன்றது. கருமலைபோன்ற அவன் செம்பொன்னுடையும் வெண்முத்தாபரணங்களும் விளங்க வீற்றிருத்தல், செவ்வந்திவான ஆடை உடுத்து நட்சத்திர ஆபரணங்கள் பூண்டு †அந்தகாரம் அரசுவீற்றிருத்தல் ஒத்தது.

தேவமாதர்கள் பக்கவாத்தியங்களோடு ஒற்றுமைப்பட்ட பாட்டாகிய அமுதத்தை இருபதுசெவிகளுக்கும் விருந்தாக வழங்கவும், முற்றத்துறந்த முனிவர்கள் வீட்டையும் வெறுத்து யாருடைய ஆட்டை விரும்புவார்களோ, அந்த மேனகை தாளத்தொனியொடும் மத்தள ஓசையொடும் பொருந்தத் தாள்கள் பெயர்த்து மனக்கருத்தைக் கண் கைகளின் அபிநயத்தாற் காட்டும் பரதநாட்டியம் இருபதுகண்களையும் களிப்பிக்கவும், தன்னைக் காதலிக்கும் மாதர்கண்களாகிய தாமரைகளை மலரச்செய்யும் சூரியனாகவும் தேவாசுரர்கைகளாகிய தாமரைகளைக் குவியச் செய்யும் சந்திரனாகவும் விளங்கினான்.

அனுமான் இராவணனைக் கண்டு பேசுதல்

அந்தநிலையில் அவனை அனுமான் கண்டான். இராவணன், அனுமானைக் கொடுங்கோபங்கொண்டு பார்த்து 'நீ இங்குவந்த காரணம் யாது? நீ யார்? இந்திரனோ? இயமனோ? பிரமனோ? குமரனோ? அரனோ? அரியோ? வடிவம் மாறிவந்திருக்கின்ற நீ இவருள் எவன்? ஆர் உன்னை அனுப்பினவர்? என்ன காரியமாக இங்கு வந்தாய்? சொல்லென்று கட்டளையிடுகின்றேன். சோர்வில்லாதபடி சொல்' என, அனுமான் கூறுகின்றான்:—

'நீ அடுக்கிச்சொல்லிய அனைவருமல்லேன். அந்த அற்ப ஆற்றலினோர் ஆருடைய ஆளும் அல்லேன். ஒரு வில்வீரனது தூதனேன். அவன் ஆரென்று அறிய அவாவுவாயானால், அறைகின்றேன்; கேள். அவன், முனிவரும் தேவரும் தேவதேவர்மூவரும்

* காத்திரம் - உடம்பு. † அந்தகாரம் - இருள்.

முடித்தற்கரிய வென்பதேன்? முடித்தற்கு நினைத்தற்கே அரிய தான பெரியகாரியத்தை முடிக்கப் பிறந்திருக்கின்றான். அவன் உனது தேகபலமும் தேவரிடம்பெற்ற ஆயுதபலமும் ஆயுட்பலமும் பிற பல வரபலமும் பிரபலமான பெருஞ்செல்வமும் ஓரம்பினால் அடியோடழியச்செய்ய வந்திருக்கின்றான். அவன் நீசெயித்த தேவரல்லன், திசையானைகளல்லன், திக்குப்பாலகரல்லன், கயிலைமலையல்லன், திரிமூர்த்திகளுமேயல்லன். மற்று, யாவனெனில், பூவுலகத்தைப் பொதுநீக்கி அரசாண்ட தசரதசக்கரவர்த்தியின் திருக்குமாரன்.]

மும்மூர்த்திகளான முழுமுற்கடவுளே இராமனாகியிருக்கின்றானெனல்

127 மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன், கைவில் ஏந்திச்
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி வந்தான்.

இ-ள். முதலும் நடுவும் முடிவும் (என்னும் உண்டாதல் நிலைபெறுதல் ஒழிதலாகிய மூன்றும்) இல்லாததாய் (இறப்பு நிகழ்வு எதிர்வு என) மூவகைப்பட்டதான கால அளவையும் (வேறு) அளவுகளையும் கடந்த (சருவ) காரணன் (ஆன பரமன், சங்கரனாகித் தரித்திருந்த) சூலாயுதத்தையும் (திருமாலாகித்தாங்கியிருந்த) சங்கசக்கரங்களையும் (பிரமனாகிப் பிடித்திருந்த) கமண்டலத்தையும் கைவிட்டு, (கோதண்டம் என்னும்) வில்லைக் கைக்கொண்டு, (மூவராக முறையே வாழ்ந்த) கைலைமலையையும் ஆலிலையையும் தாமரைமலரையும் நீங்கிவந்து, (அயோத்திநகரம் வசிக்குமிடமாக) இருக்கின்றான்.

மும்மைத்து - மூன்றுதன்மையுடையது. கணக்கு - அளவு. 'கணக்கிலாத்திருக் கோலம் நீவந்து காட்டினாய்கழுக் குன்றிலே'. திருவாசகம். நீத்த - நீங்கிய; இங்கே கடந்த என்ற பொருள் குறித்தது. திகிரி-சக்கராயுதம். கரகம், கமண்டலம், குண்டிகை, ஜலபாத்திரம் என்பன ஒருபொருட்பெயர்கள். துறந்து - நீக்கி,

முழுமுதற்கடவுளின் ஒவ்வோர் அம்சபூதரே மும்மூர்த்திக ளென்பதும் பூரணம்சபூதன் இராமனென்பதும் உய்த்துணர வைத்தார்.

அனுமான், தான் வாலிமகன் தூதனெனல்

[அவன், அதர்மத்தை அற ஒழித்துத் தருமத்தை நிலை நிறுத்தவும், தீயோரை வீழ்வித்து நல்லோரை வாழ்விக்கவும் அவதரித்திருக்கின்றான். அத்தகைய பெரியோனுக்கு அடிமை செய்யும் பெருமையுடையேன். அனுமானென்னும் பெயரினேன். சீதாபிராட்டியைத் தேடத் திசைகள் நான்கினும் செலுத்தப்பெற்ற சேனைத்தலைவரில் தென்றிசைக்கு வந்த வாலிகுமாரனான அங்கதன்தூதனாக இங்கு வந்தேன்' என்றான்.

வாலிஇறந்ததும் சுக்கிரீவன் அரசனானதும் கூறல்

வாலிமகனுடைய தூதனெனவே, தன் நண்பனான அந்த வாலியினுடைய நாமத்தைக் கேட்ட மகிழ்ச்சியினால், அனுமான் செய்த தீங்குகளை மறந்து, அத்தீங்குகள்காரணமாகக் கொண் டிருந்த கோபம் மாறிச் சந்தோஷமுகத்தினனாகி மேகத்தினின்று மின்னல் வெளிப்பட்டாற்போலச் சிரித்து, 'வாலிமகனுடைய தூதனே! வாலி சுகமாயிருக்கின்றானா? அவன் அரசாட்சி நன்றாக நடக்கின்றதா?' என்று கேட்டான். உடனே, அனுமான், முன், தன்னை வாலிற்கட்டி எட்டுத்திக்கும் இழுத்துச்சென்று இமிசித் தவனை எதிர்க்கும்வலியில்லாமையால் நட்புக்கொண்டு நண்ப னாக நடித்தவன், இப்போது, சேமம் விசாரிக்கும் நடிப்புச் செய்கின்றானென்றெண்ணிச் சிரித்து 'ஏ! அரக்கனே! அஞ்சாதே. வாலி மண்ணுலகவாழ்வொழிந்து விண்ணுலகவாழ்வடைந்தான். இனித் திரும்பிவாரான். அவனோடு அவன் வாலும் ஒழிந்தது. அவன், ஒரே ராமபாணத்தால் உயிர்நீங்கினான். இப்போது வானர ராசன், சூரியகுமாரனான சுக்கிரீவமகாராசன்' என்றான்.

வாலி கொல்லப்பட்ட காரணமும் சீதையைத் தேடிவந்த வரலாறும்

இராவணன், 'இராமன், என்னகாரணத்தினல் வாலியைக் கொன்ருன்? எங்கே யிருக்கின்ருன்? அவன்தேவியை அங்கதன் தேடுவானேன்?' என, அனுமான், 'தேவியைத் தேடிவந்த சீ ராம னுடன் சிநேகஞ்செய்து "என் துன்பத்தைத் தீர்ப்பாயாக" என்று சுக்கிரீவராசன் தன் குறைகூறி வேண்ட, இராமபிரான் தைரியமாக "வாலியின் அரசையும் அவன் கவர்ந்திருக்கும் உன் மனைவியை யும் தந்தேன்" என்று முன்பு வாக்களித்துப் பின்பு வாலியைக் கொன்று வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினன். அதன்பின், சேனைத்தலைவர்களைச் "சேனைகளோடு திசையனைத்துஞ்சென்று தேவியைத் தேடுங்கள்" என்று கட்டளையிட்டான். யாங்கள் தேடுவேமானேம். இவைகளே நிகழ்ந்தசெய்திகள்' என, இரா வணன் கூறுகின்ருன்.

அனுமான் சொல்லக் கருதியவை யாவையென இராவணன் வினவுதல்

'ஒப்பற்ற உயர்வுடைய உங்கள் குலத்தலைவனைக் கொலை செய்தவனுக்கு அடிமைத்தொழில் ஆற்றுவதை ஏற்றுக்கொண் டீர்களே! இப்பழி எப்படி யொழியும்! உங்கள்செயலை உலகம்புகழு மானல், அது, பெரும்பேதைமையுடையதேயாம். தன் தமை யனைக் கொல்லச்சொல்லிக் கொன்றவனுக்கு அன்புகூர்ந்த உன் தலைவன் ஆணையின்படி தூதுவனுகவந்த நீ எனக்குச் சொல்லக் கருதியவை யாவை? நீ போர்புரிந்த காரணம் யாது? உன்னைக் கொல்லேன். அச்சமின்றி உன் உள்ளத்துள் உள்ளதை ஒளியாமல் உரை' என்ருன்.

அனுமான், பொதுநீதி புகலல்

அனுமான், 'பொதுவான சில நீதி புகல்வோம்' என்றெண்ணி 'உன் மேலான வாழ்க்கையை வீணுக வீழ்த்தினய். இராசநீதியை எண்ணிப்பார்த்தாயில்லை. தீங்கைத் தேடிக்கொண்டாய். இறுதி

கடிதே உறுவதாயிருக்கின்றாய். ஆயினும், ஓர் உறுதி உரைக்கின்றேன். அதன்படி நடப்பாயானால், ஆயுள் நீடித்திருப்பாய். பெருந் தவஞ்செய்து பெற்ற வாழ்வைச் சீதையை வாதைப்படுத்திய பாதகத்தினால் பாழ்படச்செய்தலை உணர்கின்றாயில்லை: தீமை, நன்மையைச் செயிக்காதென்னும் உண்மையை ஓராதொழிந்தாய்.]

முறைதவறிய காமமுடிவு

128 திறம்தி றம்பிய காமச் செருக்கினால்
மறந்து தத்தம் மதியின் மயங்கினார்,
இறந்தி றந்திழிந் தேறுவ தேயலால்,
அறம்தி றம்பினர், ஆர்உளர் ஆயினார்.

இ-ள். முறைதவறிய காமக்களிப்பினால் தம்மை மறந்து மதிமயக்கமடைந்தவர்கள், மேலும் மேலும் முறைகடந்து, இழிவடைந்து, (அவ் இழிவு) மிகையுறுவதல்லாமல், (அந்தத்) தருமநெறிதவறிநடந்தவர், (குறைந்தவாழ்நாளுடையராய் இறந்தாரன்றி, இறவாது நிறைந்த வாழ்நாளுடையராய் நீடித்து) இருந்தார் யார்? (எவருமில்லை யென்றபடி).

திறம் - கற்பு; ஒழுக்கம். (தமிழகராதி). திறம்புதல் - தவறுதல். செருக்கு-களிப்பு. திறம் திறம்பிய காமச்செருக்கு-(மனையாளிடத்துமட்டும் காமம்நுகர்வதாகிய) கற்புநெறிதவறிய காமக் களிப்பு. இறந்து இறந்து இழிந்து - (மனையாள்மாட்டே காமம் நுகரும் கற்புநெறியை ஒருமுறை கடந்து அயல்மாதினிடத்துக் காமம்நுகர்ந்தவர்) மேலும் மேலும் (அக் கற்புநெறியைக்) கடத்தலும் (அதனால் மேலும் மேலும்) இழிவடைதலும் உற்று. ஏறுதல் - (இழிவில்) மிகுதல்.

சீதையை விட்டுவிடும்படி செப்புதல்

['முறைதவறிய காமத்தினால் இளமையிலேயே இறந்தவர்களின் எண் கணக்கிலடங்காது. அறநெறிக்கு மாறான சிற்றின்பவிருப்பும் பொருள்விருப்பும்போல அறிவை மயக்கும்

மயக்கமும் அவ்விருப்புக்களினின்று விடுதலையடைதலைப்போல அறிவைத் தெளிவிக்கும் தெளிவும் இல்லையென்பது, அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆன்றோர் துணிபு. இதுவரை இராசராயிருந்தாருள்ளே உன்னைப்போல நீதியறிவுடையாராய் எவரும் இருந்ததில்லை. வேதநீதிவிதிவழியொழுகும்விருப்பினனாயிருந்த நீ, தருமவரம்புகடக்கலாமோ! தீயை உட்பொதிந்த சேலைபோல, உலகமுழுதையும் ஒழிக்கவல்ல உன் உடல்வலிமை, உன் உள்ளத்துள் வைத்திருக்கும் சீதாதேவியைப் பற்றிய காமத்தீயினால் வெந்து நீறாய்விடும். பிரமன்முதலியோர் வரம் பிழைக்கும்: இராமபிரான்சரம் பிழையாது. "உனது அரும்பெறற்செல்வமும் அருமந்த சுற்றமும் ஆருயிரும் அழியாதிருக்கவேண்டுவையானால், சீதாதேவியைத் தருவாயாக" என்று சுக்கிரீவமகாராசன் சொன்னான்' என்றான்.

இராவணன் அனுமானைக் கோல்லச்சோல்லல்

என்றவுடனே, இராவணன், 'எல்லாந்தெரிந்த எனக்கு இந்த நீதிகளைக் கூறியது ஒரு குரங்கு! நன்று நன்று!' என்று பெருஞ்சிரிப்புச் சிரித்தான். பின்பு, 'இராமன் வீரமும் சுக்கிரீவன் நீதியும் இருக்கட்டும்; நீ அவைகளைச் சொல்வது நிற்கட்டும். ஏனடா, தூதாகவந்த நீ அசோகவனத்தை அழித்து அரக்கரைக் கொன்றாய்? அதைச்சொல்' என்றான். அனுமான், 'உன்னைக் காட்டுவாரில்லாமையால், அசோகவனத்தை அழித்தேன். என்னைக் கொல்ல வந்தவர்களைக் கொன்றேன்' என்றான். எனவே, இராவணன், கோபமூண்டு, 'இவனைக் கொல்லுங்கள்' எனக், கொல்லுவோர் நெருங்கியபோது, 'நில்லுங்கள்' என்று கூறி, எழுந்து, இராவணனை நோக்கிக் கூப்பியகையனாய் விபீடணன் கூறுகின்றான்.

விபீடணன் தடுத்தல்

'நீ சினந்தது நியாயமன்று. பெருந்தவஞ்செய்து பிரமனிடம் பெற்ற வரத்தினால் மூன்றுலகங்களையும் செயித்துத் தனியாக

அரசாளும் நீ, தூதாகவந்தேனென்றுசொல்லியவனைக் கொல்லுவா யோ! மன்னருள் மாதரைக்கொன்றுருளரேனும் தூதரைக் கொன்றுரிலர். பகைவரிடத்தைத் துணிவுடன் அடைந்து தம்மை அனுப்பினவர்கூறியதை அஞ்சாதுகூறி மெய்ம்மை உரைத்தலே விரதமாகவுடைய தூதரைக்கொல்லலினும் பழிப்புக்கு ஏதுவாவது யாதுமில்லை. இவனைக் கொல்லுதல் நமது குலத்துக்கு இழுக்காம். நாம் இவனைக் கொன்ருல், நமது பெருமிதவாழ்வைக்கண்டு பொருமைகொண்டிருக்கும் தேவரும் தேவாதிபரும் சிரிப்பார்கள். இராம லக்குமணர்கள் சூர்ப்பனகையை அங்கபங்கம்செய்து 'இவ் விடத்துச் செய்திகளை இராவணனுக்கு உரை' என்று கூறிவிட் டாரேயன்றிக் கொன்றுவிட்டாரல்லர். இவனைக் கொல்வாயானல், இவன் இங்கே கண்ட காட்சிகளையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் இராமனிடம் சொல்லாதபடி செய்தாயாவாய். அன்றியும், 'உன்னைக் கொல்லேன்'* என்று வாக்களித்திருக்கிருய்' என்று கூறினன்.

இராவணன், அனுமான்வாலைச் சுட்டு ஊரைவிட்டு ஓட்டும்படி கட்டளையிடல்

அதுகேட்டு, இராவணன், 'நீ கூறியது நியாயமே' என்று சொல்லி, அனுமானைநோக்கி 'நீபோய், இங்கு நிகழ்ந்த செய்திகளைத் தெரிவித்து, இராமலக்குமணரைக் கொண்டுவா' என்று கூறிப் பக்கத்துள்ளாரைப் பார்த்து 'இவன்வாலை மூலமறச்சுட்டு ஊரைச் சுற்றிக்கொண்டுபோய் ஓட்டிவிடுங்கள்' என்ருன். எனவே, அவர் கள் அவன் ஆணையை நிறைவேற்ற ஆர்ப்பரித்து எழுந்தார்கள்.

அரக்கர் அனுமானைக் கயிறுகள்கொண்டு கட்டல்

அப்போது, இந்திரசித்து 'இவன் பிரமாத்திரத்துடனிருக்கும் போது சுடலாகாது. இவனைக் கயிறுகொண்டு கட்டுங்கள்' என்று அந்த அத்திரத்தை விடுவித்தான். இராக்கதர்கள், தேர்க்கயிறு

---

* 'தும்பினைக் கொல்லாம், நெஞ்சம் அஞ்சலை நுவல்தி என்ருன்' (இப் படலம் அ௬.)

யானைக்கயிறு குதிரைக்கயிறு முதலாக, இராட்சசிகள் தாலிக் கயிறு நீங்கலாக, கண்ட கண்ட கயிறுகளையெல்லாம் கொண்டு வந்து அனுமானைக் கட்டினார்கள். அவன், 'யான் தெய்வப்படையைச் சிதைத்தேனாகாமல் அதனைப் பகைவன் தானே விடுவித்தது நலமாயிற்று. என்வாலைச் சுடச்சொல்லியது ஊரைச்சுடச்சொல்லியதாயிற்று' என்றெண்ணிக்கொண்டு பாசபந்தம்* நீங்கியும் நீங்காதவன்போலநடிக்கும் யோகிபோல, தான் நினைத்தமாத்திரையே அறுத்துவிடக்கூடிய எளிமையான †பாசபந்தத்துக்கு உட்பட்டு, வலிமையில்லாதவன்போல, அடங்கிச்சென்றான்.

அரக்கர், அனுமான்வாலில் சீலையைச்சுற்றித் தீயைப் பற்றவைத்தல்

அவன் இராவணன் அரண்மனைவாசலுக்கு வெளியே வந்தபோது, அரக்கர் அவன் வால்முழுவதையும் துணிகொண்டு சுற்றி நெய்யும் எண்ணெயும்விட்டு நனைத்து நெருப்புப்பற்றவைத்தார்கள். 'சீதையைக் கண்டுபேசி அசோகவனத்தை அழித்து அட்சகுமாரன்முதலியோரைக் கொன்ற குரங்குக்குவந்தகதியைக் காணவாருங்கள்' என்று இராக்கதர் இலங்கைத்தெருக்களெல்லாம் சென்று பறையறைந்து சாற்றிச் செய்திதெரிவித்தார்கள்.

சீதை, அனுமானைச் சுடாதிருக்கும்படி அக்கினிதேவனை வேண்டல்

அச்செய்தியைச் சில அரக்கர்கள் சென்று சீதைக்கும் தெரிவித்தார்கள். அவள், 'உயிர்பதைத்தாள், வேர்த்தாள், உலந்தாள், விம்மினாள், விழுந்தாள், அழுதாள், வெய்துயிர்த்தாள்.' (உலத்தல்-(நெஞ்சு) அழிதல். வெய்துயிர்த்தல்—சுடுமூச்சுவிடுதல்). பின்பு 'அக்கினிதேவனே! யான் கற்பினால் பரிசுத்தியுடையேனென்றால், உலகசாட்சியான நீ அனுமானைச் சுடாதிருப்பாயாக' என்று வேண்டினாள். அக்கினி அஞ்சி அடங்கினான். அனுமான்வால், மயிர்சிலிர்ப்புற எலும்புவரையும் குளிர்ச்சி பரவலுற்றது.

---

* பாசபந்தம்—பிறப்பிறப்பிற்குக் காரணமான கட்டு. †பாசபந்தம்—கயிற்றுக்கட்டு.

தீ, தன்னைச் சுடாதது சீதைகற்பின்செயலென அனுமான் களித்தல்

வாலில் வைத்த தீ சுவாலித்தெழுந்து உடம்புமுழுதும் மூடியும் சுடாதிருந்ததை உணர்ந்து, அனுமான் இந்த அற்புதம் சீதாதேவிகற்பினலாகியதென்று களிப்புற்ருன். உலகக்காட்சிகளை அறிவில்லாத ஐம்பொறிகள் காட்ட, அறிவு, அறிந்துகொள்ளுதல் போல, இலங்காநகரக்காட்சிகளை அறிவற்ற அரக்கர் காட்ட அனுமான் கண்டுகொண்டு சென்ருன்.

இலங்கையை எரித்தல்

அவன் இலங்கையின் முடிவெல்லையை அடைந்தபோது, வழுவி அகல்வதற்கு உரிய சமயம் வந்ததென்றெண்ணி விரைவாக விண்ணின்மேலெழுந்தான். எழவே, அவனை இருபக்கமும்பற்றி யிழுத்துச்சென்ற இராக்கதர் ஈரைம்பதினுயிரவரும் கீழேவீழ்ந் திறந்தார்கள். இனிச் செய்யற்பாலது இலங்கையை எரிக்கு இரை யாக்குவதேயென்று எண்ணி, எரிபற்றி எரியும் வாலை இலங்கை யெங்கும் செலுத்தினன். அந்த வால், சிவாம்சனன அனுமான் இலங்கையை எரிக்க எண்ணியதை அறிந்து சிவனுடைய எரியிரும்புப்படையாகிய மழுவாயுதம் அவன்பின் உற்றது போன்றது. ஈசனும் அனுமானும் தத்தம் தனுவினின்று முறையே முப்புரத்தையும் இலங்கையையும் எரிக்க ஏவிய கோலும் வாலும் ஒன்றையொன்று ஒத்திருந்தன. (தனு-வில்; உடம்பு. கோல்-அம்பு.) எரியும் வாலோடு அனுமான் இலங்காநகரமாடங்களின் மீது குதித்தது, மலைகளின்மேலே எரிந்துகொண்டு இடிவிழுவதை ஒத்தது.]

பிணிவீட்டுபடலம் முற்றியது.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

தமிழ்நூல்களும் கல்வெட்டுக்களும்.

[வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு.]

'நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்'

என்ற தமிழ்முதுமகளின் அமிழ்தூறமொழியை உன்னி நோக்குங்கால், மனிதருக்குத் தாம் பிறர்க்குச்செய்த உதவியும் அதனால் தோன்றிய புகழும் உலகில் பன்னெடுங்காலம் நின்று நிலவவேண்டுமென்ற அவா இருத்தல் இயல்பே என்பது புலனாகும். அதனால் தாம் வருந்தித்தேடிய அரும்பெரும்பொருளை ஊருணி நீர்போல் உலகத்தார்க்கு உதவுமாறு அறஞ்செயப்புகுந்தோர் பலர், தம் காலத்துக்குப்பின்னர் அவ்வறச்செயல் மறைந்து போகாமைப்பொருட்டும், பிறரும் தம்மைப்போல் அறஞ்செய்து புகழும் புண்ணியமும் ஈட்டற்பொருட்டும் தம் காலத்து அரசனும் பெருமக்களும் அறியப் பொது இடங்களில் பலருங்காணத்தக்க வாறு அவ் அறச்செயல்களைக் கல்லிற் பொறித்துவைப்பது வழக்கமாயிருந்தது. அத்தகைய கல்வெட்டுக்கள் பல ஆயிரக் கணக்காக நம் தமிழ்நாட்டிற் காணக்கிடக்கின்றன. அவை பெரும் பாலும் பல்லவராட்சிதொடங்கியதன்பின்னரேயாம்.

இதனால், பல்லவராட்சிக்குமுன் கல்லில் எழுதும் வழக்கம் இல்லையெனக்கருதல் கூடாது. செந்தமிழ்நூல்களில் மிகப்பழைய தாகிய ஒல்காப்பெருமைத் தொல்காப்பியத்துக் காணும்,

'காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்'

(தொல். புறத். 60.)

என்னும் அடிகளால், புறங்காட்டாது போர்செய்து பட்ட வீரர்க்குக் கல் நடுதலுண்டென்பது பெறப்படும். அந்நூற்பாவிதி கொண்டு கல்நடுதலைப்பற்றிப் பாடிய பாட்டுக்கள் பல புறநானூறு, அகநானூறு, திருக்குறள், புறப்பொருள்வெண்பாமாலை முதலிய பல நூல்களிலும் காணப்படுகின்றன. அந்நடுகல்லில் வீரனது பெயரும் பெருமையும் எழுதுதலும் உண்டு என்பது,

"அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினி நட்டனரே கல்லும்"

என்ற புறநானூற்றுச்செய்யுள் (264) வரிகளாலும்,

"ஆடவர், பீடும் பெயரும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"

என்ற அகநானூற்றுச்செய்யுள்வரிகளாலும்,

"அவன்பெயர் கன்மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கன்னாட்டின்று"

என்ற புறப்பொருள்வெண்பாமாலைக் கொளுவினாலும் பெறப்படும். ஆனால் அறங்களைப்பற்றிக் கல்லில் எழுதிவைக்கும் வழக்கம் அப் பழங்காலத்தில் இல்லை.

இவ்வாறு அறச்செயல்களைக்குறித்துப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் தொடக்கத்தே, அக்காலத்து மன்னனது மெய்க்கீர்த்தியும்*, பின்னர் இன்னார் இன்ன அறத்தின்பொருட்டு இத்தனைபொருள் வைத்தார் என்பன முதலிய செய்திகளும் குறிக் கப்பெறும்.

---

* மெய்க்கீர்த்தியாவது:—

"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியும் மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி" (பன்னிருபாட்டியல்.)

"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியா
லெழிலரசர் செய்தி யிசைப்பர்"

(வெண்பாப்பாட்டியல். செய்யுளியல் 34.)

இம்மெய்க்கீர்த்திகள் சோழமன்னர்களில் முதல் இராசராசன் காலம்முதற்றான் விரிவாகக் கூறப்பட்டன என்று தோன்றுகிறது.

இக்கல்வெட்டுக்கள் இன்றேல் தமிழ்நாட்டு வென்றிவேந்தர்களுடைய பெருமைகளும், அக்காலத்து நாகரிகமேம்பாடுகளும், புரவலர் புலவர் முதலியோர் வரலாறுகளும், பல தூய தமிழ்ச் சொற்களும், எத்துணையோ அரியசெய்திகளும் வெளியாகாமல் மறைந்தேபோயிருக்கும். தம்காலத்துச் செய்திகளைப் பிற்காலத்தார்க்கு விளக்கும் பேரொளிவிளக்கங்களாக இவை இருக்கவேண்டுமென்று கருதியேபோலும் அக்காலத்தார் கல்வெட்டுக்கள் பழுதுறாமல் எண்ணெய்பூசிப் பாதுகாத்துவந்தனர்; கல்வெட்டுக்களுக்குச் செப்புத்தகடுகளில் படிஎழுதியும் வைத்திருந்தனர். கல்வெட்டுக்களுக்கு எண்ணெய்பூசியுள்ளனரா என்பதைக்கவனிப்பது பண்டு கோயில் மேற்பார்வையாளர்களின் கடமையாயிருந்தது. இக்காலத்தில் இவ்வழக்கம் இல்லாதுபோனதால் எத்தனையோ கல்வெட்டுக்கள் பொரிந்துபோய்ப் பழுதுற்றன. அந்தோ! அவற்றுள் எத்தனை அரிய செய்திகள் மறைபட்டனவோ?

தமிழ்வேந்தர்களது ஆட்சிக்கதிர்மறைந்து தமிழர்கள் உறங்கிக்கிடந்த காலையில் இக்கல்வெட்டுக்களின் அருமைபெருமைகளை மாந்தர் அறியாதிருந்தனர்.

அந்நிலையில் தமிழ்நாட்டின் நற்காலமாக டாக்டர். உல்ஷ் (Dr. Hultzch) என்ற துரைமகனார் இந்தியாவுக்கு வந்து ஈண்டுள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டு, அவற்றின் அருமையையுணர்ந்து அரசப்பிரதிநிதியிடம்கூறி, அக்கல்வெட்டுக்களைப்படியெடுத்து ஆராய்ச்சிசெய்வதற்கென ஒரு துறை (A depart-ment) ஏற்படுத்தியதோடு தாமும் உடனிருந்து ஆராய்ந்தார்; திருவாளர்கள் து. அ. கோபிநாதராயர், வெங்கையா என்பவர்களையும் இத்துறையில் பழக்கிவைத்துச்சென்றார்.

இப்பெரியோர்களாலும் பின்வந்தோர்களாலும் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுப் புத்தகவடிவமாய் வெளிவந்துள்ளன. இதுவரையிலும் ஏழுதொகுதிகள் வெளிவந்துள்ளன. எட்டாம் தொகுதியும் விரைவில் வெளிவரும். எடுத்த கல்வெட்டுக்களிலும் சற்றேறக்குறைய முப்பதினாயிரம் கல்வெட்டுக்கள் இன்னும் வெளியிடப்பெறவில்லை. இவையனைத்தும் வெளிவருமாயின் பல அரிய செய்திகள் வெளியாகும் என்பது திண்ணம்.

நிற்க, இக்கல்வெட்டுக்கள் தமிழ்நூற்பயிற்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்வோம்.

ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம்

தேவாரத் திருப்பதிகங்களில் புகழப்பெற்ற சிவதலங்கள் பல இத் தமிழ்நாட்டிலுள்ளன. தமக்கெனத் தனிப்பதிகம் பெற்றவை பாடல்பெற்றதலங்களெனவும், பிறதலங்களைப்பாடிய பாடல்களினகத்தும், பொதுப்பதிகங்களினகத்தும் வைத்துக்கூறப்படுவனவாய்த் தமக்கெனப் பதிகங்களில்லாதவை வைப்புத்தலங்களெனவும் பெயர்பெறும். அத்தகைய வைப்புத்தலங்களிற் பல இக்காலத்தில் பண்டைப்பெயர் சிதைந்தும், வேறுபெயர் பெற்றும் அவை யாண்டுள என அறிதற்கும் இயலாதிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்வதற்குக் கல்வெட்டுக்கள் உதவிசெய்கின்றன. எடுத்துக்காட்டாக இரண்டொரு தலங்களைப் பற்றி ஆராய்வாம்.

திருநாவுக்கரசரது தலத்திருத்தாண்டகம் நான்காம் திருப்பாட்டில்* ஏமநல்லூர் என்ற தலம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அது யாண்டையதென ஆராய்வுழி ஒரு கல்வெட்டு அதனைப் புலப்படுத்துகின்றது.

---

* எச்சில் இளமரேமநல்லூர் இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறுபாக்க மளப்பூர் அம்பர் ஆவடுதண்டுறை யழுந்தூர் ஆறை
கச்சினங் கற்குடி கச்சூர் ஆலக் கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங் கயிலாய நாதனையே காணலாமே.

தஞ்சாவூர்சில்லா கும்பகோணந் தாலூகா திருப்பனந்தாளுக்கு அருகில் திரைலோக்கி என்று ஓர் ஊர் உள்ளது. அவ்வூருக்குக் கிழக்கேயொன்றும் மேற்கேயொன்றுமாக இரண்டு சிவன்கோயில்கள் உள்ளன. அவைகளுள் கிழக்கில் உள்ள கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டுக்களுள், முதல் இராசராசமன்னனது அருமை மகனாகிய கங்கைகொண்டசோழனது பதினாறுவது இராச்சிய ஆண்டில் தீட்டப்பட்டதே பழமையானதாகும். அதில் இவ்வூர் "ராஜேந்திரசிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டுத் திரைலோக்கி மகாதேவி சதுர்வேதிமங்கலம்" என்று குறிக்கப்பெற்றுள்ளது.

இவ்வூரைக்குறிப்பிடும் தஞ்சை இராசராசேச்சுரத்தில் பொறிக்கப்பட்டுள்ள, முதல் இராசராசன்கல்வெட்டொன்றில்* "ராஜேந்திரசிம்ஹ வளநாட்டு† மண்ணிநாட்டு‡ ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலம்" என்ற தொடர் காணப்படுவதால் இக்காலத்துத் திரைலோக்கி என வழங்கப்படும் ஊரே ஏமநல்லூர் என்னும் தலமென்பது வெளிப்படுகிறது. முதலாம் இராசராசமன்னன் தன்மனைவியின்பெயரை அவ்வூருக்கிட்டுத் திரைலோக்கி என மாற்றினான்போலும்.

---

* S. I I. Vol II. Part III. Page 317. line. 7.

† முதல் இராசராசமன்னன்காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் இராசேந்திரசிங்கவளநாடு என்பது ஒன்றாகும். இது, காவிரிக்கும், வெள்ளாற்றிற்கும் இடையிலுள்ள பெருநிலப்பரப்பாகும். முதல் இராசராசன்காலமுதல், அதிராசராசன்காலம்முடிய இதற்கு இப்பெயரே வழங்கிவந்தது. இவனுக்குப் பின்னர், பட்டமெய்திய முதற்குலோத்துங்கன் இவ்வளநாட்டை இரண்டாகப்பிரித்து, அவைகளுள் கீழ்ப்பகுதிக்கு விருதராசபயங்கரவளநாடு என்றும், மேற்குப்பகுதிக்கு உலகுய்யவந்தவளநாடு என்றும் பெயர் இட்டனன். இம் மேற்குப்பகுதியோ விக்கிரமசோழன்காலத்தில் விக்கிரமசோழவளநாடு என்று பெயர்பெற்றது.

‡ மேற்கூறிய ராசேந்திரசிங்கவளநாடு, மண்ணிநாடு இன்னம்பர்நாடு பொய்கைநாடு என்பனவாகப் பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் மண்ணிநாடு என்பது ஒன்றாகும். ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவிசதுர்வேதிமங்கலம், திருக்குடித்திட்டை (திருக்களத்திட்டை), திருவிசலூர் ஆகிய இவ்வூர்கள் இம் மண்ணிநாட்டிலிருந்தனவென்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

திருச்சிற்றம்பலம் என்ற ஊரே திருச்சிற்றேமம் என்ற தேவாரம்பெற்ற தலமாகும்.

திருச்சிற்றேமம் என்ற தலமொன்று தேவாரத்திற் காணப் பெறுகின்றது. அப்பெயர் இக்காலத்து மாறி வழங்குகிறது. அத் தலம் தஞ்சைசில்லா திருத்தருப்பூண்டித்தாலூகா சிற்றும்பூரே என்று சிவஸ்தலமஞ்சரியாசிரியர் குறித்தார். அது தவறென்று இப்போது புலனாகிறது. அவர் குறித்த சிற்றும்பூர்ச் சிவன்கோயி லிற் காணப்படும் முதற்குலோத்துங்கன், மூன்றாங்குலோத்துங் கன் கல்வெட்டுக்களில் 'வேண்டலைக்கூற்றத்துச் சிற்றூர்' என்ற பெயரே காணப்படுகிறது.

ஆனால் தஞ்சைசில்லா பட்டுக்கோட்டைத்தாலூகாவிலுள்ள திருச்சிற்றம்பலம் என்ற ஊர்ச் சிவன்கோயிலிற் காணப்படும் பல கல்வெட்டுக்களில் முதற்பராந்தகனது கல்வெட்டு ஒன்று அவ் வூரைத் திருச்சிற்றேமம் என்று உணர்த்துவதாலும், ஏனைய கல் வெட்டுக்களும் அவ்வாறே அவ்வூர்ப்பெயரைக் குறிப்பிடலாலும் பிற்கூறிய ஊரே அத்தலமென்பது போதரும்.

தலைஞாயிறு.

சோழநாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களுள் திருக்கருப் பறியலூர் என்பது ஒன்றாகும். இது மூன்றாங்குலோத்துங்க சோழன்காலத்தில் தளிநாயகச் சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப் பெற்றது. அதுவே தலைஞாயிறு என்று மருவி வழங்கலாயிற்று. Inscriptions 140 to 150 of 1927. (Annual Reports on Epigraphy for 1926-27.)

எனவே இக்கல்வெட்டு ஆராய்ச்சியால் தமிழ்நூல்களில் விளங்காது கிடக்கும் இவைபோன்ற பலசெய்திகள் ஐயமற வெளிப்படும் என்பது திண்ணம். ஆகையால் தமிழின் ஆக்கங் கருதும் அன்பர்கள் பலரும் கல்வெட் டாராய்ச்சியில் முனைந்து பயிலுதல் தமிழ்நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் பேருதவிசெய்ய ஏதுவாகும்.

௧.

ரமாமணி.

[௩௩-ஆம் தொகுதியின் ௩௪௮-ஆம்பக்கத்தொடர்ச்சி.]

இரண்டாவது கண்டம்.

முதல் அதிகாரம்.

ராஜமார்க்கத்தில்

There—now—leanon me—
place your foot here—**Manfred.**

அங்கே - என்பேரில் சாய்ந்துகொள் - உன்காலை இங்கே-வை.

மணிராஜன் வழிநடுவில் ஓர் ஊரில் தங்கிச் சுந்தரி ஏறிப் போவதற்கு ஒரு வண்டி அமர்த்தி, அவளுக்காக ஒரு வேலைக்காரியும் தனக்காக ஒரு வேலைக்காரனும் நியமித்துச் சுந்தரியையும் வேலைக்காரியையும் வண்டியில் ஏறச்செய்து, தான் கால்நடையாகவே வேலைக்காரனுடன் போய்க்கொண்டிருந்தான். வண்டி விரைவாகச் சென்றதால் அவன் சற்றுப் பின்னடைந்துவிட்டான்.

நடந்துபோகும்போது அவன் கால்பட்டு ஏதோ ஒரு வஸ்து 'மடமட'வென்று நொறுங்கிற்று. அவன் குனிந்து கையால் தடவிப்பார்த்ததில், அது ஒரு முறிந்த பல்லக்கு எனத் தெரிந்தது. விம்மிவிம்மி அழுதுகொண்டிருந்த ஒரு மாதின் குரல் அவன் காதில்விழுந்தது.

அவளை 'நீ யார் அம்மா!' என அவன் வினவினான். அவள், "நான் ஒரு 'யவன' ஸ்திரீ; நடுவழியில் கள்வர்கள் வந்து எனது நகைகளைக் களவுகொண்டு, என்வேலைக்காரர்களைக் கொன்றுவிட்டு என்னை இவ்விடத்திலேயே விட்டுவிட்டுப்போய்விட்டார்கள்.

இப்போது, என்னால் தானாக உதவியின்றி நடக்கமுடியவில்லை. ஆபத்துக்காலமாயிருப்பதால், குற்றம் இல்லை. நான் தங்களைப் பிடித்துக்கொண்டு நடந்துவருகிறேன். என்னை அழைத்துக் கொண்டுபோய்ச் சமீபத்திலிருக்கிற ஏதாவது ஒரு வீட்டில் சேர்த்தால், தங்களுக்கு நன்மையுண்டு. 'அல்லா' தங்களுக்கு உதவி செய்வார்;" என விசனத்துடன் உரைத்தாள். மணிராஜன் அவளை மெதுவாகக் கூட்டிக்கொண்டுபோய்ச் சமீபத்திலிருந்த ஒரு வீட்டில் பத்திரமாக இருக்கச்செய்து, சுந்தரியைநோக்கிப் புறப்பட்டான். வண்டி முன்பே சென்றுவிட்டதால், அதிலிருக்கிறவர்களின்கெதி என்னவாயிற்றோவென்று கலக்கத்துடன் அவன் விரைவாகச்சென்று வண்டியைக் கண்டவுடன் தன்மனைவி சௌக்கியமாய் இருக்கிறாளெனத் தெரிந்து சந்தோஷம் அடைந்து இது கடவுள்கிருபைதானென நினைத்துத் தானும் வண்டியில் ஏறிக்கொண்டு தன் ஊரைநோக்கிச் சென்றான்.

* * * * * *

(இந்தக்கண்டத்தின் 2, 3, 4 வது அதிகாரங்கள் நமது கதைக்குச் சம்பந்தப்படாததால் இங்கே எழுதப்படவில்லை.)

5-வது அதிகாரம்.

தனது தேசத்தில்

𑌶𑌬𑍍𑌦𑌾𑌖𑍍𑌯𑍇𑌯𑌂 𑌯𑌦𑌪𑌿 𑌕𑌿𑌲 𑌤𑍇 𑌯𑌃 𑌸𑌖𑍀𑌨𑌾𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।
𑌕𑌰𑍍𑌣𑍇 𑌲𑍋𑌲𑌃 𑌕𑌥𑌯𑌿𑌤𑍁𑌮𑌭𑍂𑌦𑌾𑌨𑌨𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌲𑍋𑌭𑌾𑌤𑍍 ॥

மேகசந்தேசம் 2-வது சருக்கம்.

[தோழிகளின்முன்னிலையில், உரத்தகுரலுடன் சொல்லத் தகுந்ததான வார்த்தையையும், உன் நாதன் உன் முகத்தைத் தொடுவதற்கு ஆசைப்பட்டுக்கொண்டு உன்காதில் இரகசியமாகச் சொன்னான்.]

சுந்தரியை அழைத்துக்கொண்டு மணிராஜன் தன்னூர்போய்ச் சேர்ந்தான். அவனுக்குத் தகப்பனில்லை. தாயார் விதவையாகி வீட்டில் இருந்தாள். அவனுக்குச் 'சியாமா'வென்ற ஒரு சகோதரி உண்டு. அவளுக்குப் புருஷன் இருந்தும் கைம்பெண்போலவே அவள் தனது தாயின்வீட்டில் இருந்தாள். அவளிடம் நடத்தைத் தவறு ஒன்றும் இல்லை; வெறும் அசட்டுத்தனந்தான். தன் கணவனுக்கு இதமாயிருந்து, அவனைத் தன்வசப்படுத்த அவளுக்குத் தெரியவில்லை.

தனது நன்னடக்கையாலும் அன்புள்ள வசனங்களாலும், சுந்தரி எல்லோரையும் சந்தோஷப்படுத்தினாள். எல்லோரும் அவளிடம் அதிக அன்புள்ளவர்களாயிருந்தார்கள்.

மணிராஜன் ஊர்வந்துசேருமுன்னமேயே, அவனுடன் சென்ற பிரயாணிகள் அங்கே வந்துசேர்ந்தார்கள். மணிராஜனைக் குறித்து அவன் தாயும் உறவினரும் அவர்களை வினவினதில், அவனைப் புலி கொன்று தின்றுவிட்டதென்றும், அவனைப் புலி தின்பதைத் தாங்கள் நேரில் பார்த்ததாயும் சொன்னார்கள். அவர்களுக்குள், புலியின் உருவத்தைப்பற்றி விவாதம் தொடங்கிற்று. ஒருவர் அது எட்டுச்சாண் நீளம் இருக்கும் என்று சொல்ல, மற்றொருவர் அது சரியாகப் பதினான்குசாண் நீளமுள்ளது என்று அதை ஆக்ஷேபித்தார். முன்னவர் மறுபடியும் அது எப்படி இருக்கமுடியும்? நாம் தெய்வச்செயலாய்ப் பிழைத்தோம். 'எங்களைப் புலி அடிக்கவந்தபோது நாங்கள் விரைவாக ஓடிவிட்டோம். மணிராஜனால் ஓடமுடியவில்லை. ஓடிவரும்படி அவனை நாங்கள் எல்லோரும் எவ்வளவோ உற்சாகப்படுத்தியும், அவனால் ஓடமுடியாமல் புலிவாய்ப்பட்டு இறந்தான்.' என்ற சொற்களைக் கேட்டு மணிராஜனுடைய தாயும் பந்துக்களும் வருந்திக்கொண்டிருக்கும்வேளையில், அவன் தன் மனைவியுடன் சௌக்கியமாய்வந்து

சேர்ந்தான். தனது தாய் மருகியை ஆதரவுடன் வரவேற்றதைக் கண்டு, மணிராஜன் இன்பக்கடலில் மூழ்கினான். அவனது மனம் சுந்தரியின் உருவத்தால் நிரப்பப்பெற்றிருந்ததால், ஒருக்கால், தனது தாயும் உறவினர்களும் அவள்மீது ஆதரவாய் இருக்கமாட்டார்களோ எனச் சந்தேகமடைந்ததான அவன் மனம் அப்போது சந்தோஷத்தை அடைந்தது. எந்த மனதில் வருத்தம் மிகுந்திருந்ததோ, அதே மனத்தில் தெளிவு பிறந்தது. அவனுடைய முகம் ஆநந்தத்தால் மலர்ந்தது. நல்லகாரியங்களைச்செய்வதற்காகவே, பூமி இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. இவ்வுலகம் முழுவதும் அழகுவாய்ந்ததெனவே அவன் நினைத்தான். ஒருவனுக்குப் பிரணயம் மிகுந்தால், அது அற்புதமானகாரியங்களைச் செய்யும்; புண்ணியமல்லாததைப் புண்ணியமாக்கும்; இருட்டை ஒளியாக்கும். மணிராஜனின் நிலைமை இவ்விதமாக இருந்தது.

சுந்தரியின் நிலைமை எவ்விதம் இருந்ததென்பதை
அடுத்த அதிகாரத்தில் தெரிவிப்போம்.

[தொடரும்]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி.

ஏடர், இண்டர் (அண்டர்), இடையர்.

(நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்)

இடையர் எனுஞ்சொல் இடைநின்றோர் என்ற கருத்தில் வந்தது எனச் சிலர் சொல்லுவர். முதலிகள், இடையர், கடையர் என்ற பாகுபாடு பண்டைத் தமிழகத்தில் இருந்தது என்பது அவர் கொள்கை. (உவின்சிலோ அகராதி—கனகசபைப்பிள்ளை ஆதியோர்). பாலைக்கும் மருதத்துக்கும் இடைப்பட்ட பிரதேசமாகிய முல்லைநிலத்தில் வசிப்பவராதலால், யாடுமேய்ப்போர் இடையர் எனப்பட்டார் என்பது தமிழ் "லெக்சிகன்" அகராதிகாரரின் கருத்து. தமிழ்ச்சங்க அகராதி (உவைமன் கதிரைவேற்பிள்ளையுடையது) "இடை" பசுவின்பெயரென்றும் "இடையர்" முல்லைநிலத்துத் தாழ்ந்த ஆடவரைச் சுட்டும் என்றும் கூறும். இடையர் யாடுமேய்ப்போரையன்று, ஆயரைப்போல மாடுமேய்ப்போரையே குறிக்கும் என்பது கருத்துப்போலும். ஆயின் "இடை" பசு எனும் அர்த்தங்கொள்ளலை அகராதிகளிற் காணேம். விருஷ எனும் வடசொல்லின் தற்பவமாகிய "விடை" இடை என நின்றதாம் என்பது ஆதிரைப்பத்திரிகாசிரியரின் கருத்து. (Ardra Vol. III, P. 307.)

இடையர் தமிழ்நாட்டில் ஆதிதொட்டு ஒருசாதியாராய் விளங்கிவருகின்றமையால், பிற்காலம் விருஷ எனும் வடசொல் இடை என மருவிவரும்வரையில் அன்னோர் பெயரின்றி இருந்தார் என்று கொள்ள அமையாது. "இடை" தமிழில் எருதையோ பசுவையோ குறித்தற்கு ஆதாரவும் காணேம். முல்லைநிலத்துக்கு இடைநிலம் என்ற பெயரீடு இருந்ததையும் அறியோம். நிலத்தை நோக்கி யாடுமேய்ப்போரின்பெயர் வந்ததாயின், முல்லையர் எனவன்றோ வழங்கப்பட்டிருப்பர்? அன்றியும், சரித்திரகாலங்களில்

பிரபல நாட்டாண்மையுள்ளோராய் இருந்தோராகிய இடையர் குலத்தவரை, முதலிகளுக்கும் கடையருக்கும் இடைப்பட்ட சாதியார் என வைத்தமையும் பொருந்தாது. ஏராண்மைத் தொழிலாளராகிய கடையர் எனும் வகுப்பார் சாதிகளுட் கடையானவர் எனச் சொல்ல யார் முற்படுவர்? கடையர் எனும் பெயரிட்டின் உண்மை உற்பத்தியை இங்கு விரிப்பிற் பெருகும். எமது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி வெளிப்படுங்கால் ஆங்குக் காண்க.

யாட்டோடு சம்பந்தப்பட்டோரே இடையர் என்பதையும் எமது அகராதி சரித்திரமுறையான ஆராய்ச்சிசகிதமாகக் காட்டும். சொற்கள், நெடுங்காலத்தினூடு பலவகையால் உருவினும் பொருளினும் பரிணமம் அடைந்துவந்திருக்கின்றன. அவற்றின் தற்காலத் தோற்றத்தைக்கொண்டு யுத்தியால் ஓர் உற்பத்தியைப் படைத்துக்கொள்ளாது சரித்திர ஆராய்ச்சியால் அளவிட்டுக் கண்டதே சாஸ்திரீயமான சப்தோற்பத்தியாகும் என்றது இவ்விடத்துக் குறிக்கத்தகும். இனி யாடுமேய்க்குந்தொழிலுடையோருக்கு உள்ள ஏடர், இண்டர், அண்டர், இடையர் எனும் பெயர்களை ஒப்புநோக்கும்போது, கடைநின்ற சொல்லின் உற்பத்தி கரதலாமலகம்போலத் தெளிவாகும். ஏடர் எனுஞ் சொல் பழைய இலக்கியங்களில் இல்லைபோலும். ஆயின், பிற்பட்ட நூல்களில் அதனைக் காண்கின்றோம். கம்பர்க்குக் குலோத்துங்கன் விட்ட சாசனப்பாட்டில்,

'கதுவிவரு பொன்னி கரைகடவா வண்ணம்
பதுமமுகக் கம்பனவன் பாட—வதுவைவரி
மாடை யரைக்கழஞ்சு வண்கம்பர்க் கீந்தபரி
சேடர்குலோத் துங்க னெழுத்து'

என வருமிடத்து, "ஏடர்குலோத்துங்கன்" என்றிருக்கக் காண்கின்றோம். (பெருந்தொகை I, 1142). சோழ அரசர்கள் இடையர்

குலத்தவர்தம்கோன் எனவழங்கப்பட்டது உண்டா என ஆராய்ந்த வளவில், ஒட்டக்கூத்தரும் குலோத்துங்கசோழனைவிளித்து:

வெள்ளத் தடங்காச் சினவாளை
வேலிக் கமுகின் மீதேறித்
துள்ளி முகிலைக் கிழித்துமழைத்
துளியோ டிறங்குஞ் சோணாடா
கள்ளக் குறும்பர் குலமறுத்த
கண்டா வண்டர் கோபாலா
பிள்ளை மதிகண் டெம்பேதை
பெரிய மதியு மிழந்தாளே.

என்று கூறிய பாடலில், சோழன் "அண்டர்கோபாலன்" எனப்படுகின்றான். (இதனை எமக்கு எடுத்துக்காட்டியவர் 'வித்தகப்'பத்திராசிரியர் ஸ்ரீ. S. கந்தையபிள்ளை ஆவர்.) ஏடரும் அண்டரும் முல்லைநிலமக்களாகிய இடையரே என்பதிற் சந்தேகமின்று. ஏடர் எனுஞ் சொல்லே இண்டர் (இடையர்) எனவும், அப்பால், அண்டர் எனவும் உருமாறியது. "படித்தவர்" பண்டிதர் என வந்ததுபோலத் தமிழில் பல உருவங்கள் மெல்லொற்று அணைந்துவரல் பிரசித்தம். இண்டர் எனுஞ்சொல் அண்டருக்கு முந்தியது என்பதற்கு, தமிழின் பழைய பாகதங்களுள் ஒன்றாகிய சிங்களத்தில் எண்டேரு (இடையர்) என இருத்தல் தக்க சான்று. எகரமும் இகரமும் ஒத்த பிறப்புடையன; ஆதலால், ஏடர் உருமாறிச் சிங்களத்தில் (பழந்தமிழில்) எண்டேரு என வந்தவிடத்து, தமிழில் இண்டர் ஆயிற்று எனக் காண்க. இவற்றில் ணகரமெல்லொற்று இடைப்பிறவரலாய் எய்தியமையால், ஏண்டர் என நிற்கற்பாலது எண்டர் இண்டர் எனத் தலையுயிர் குறுகிவந்தது. அண்டர் எனும் உருவத்தில் ஆதி ஏகாரம் (ஏடர்) அகரமாயினமை, "கேளல்" களிறு என மாறியமைபோலாம். இவை மொழிநூல் உணர்ச்சியுள்ளார்க்கு இனிது புலமாகும்.

இண்டர் அண்டர் எனும் உருவங்கட்கு ஏடரோடு உள்ள ஒற்றுமையைக் கண்டோம். அப்பால், ஏடரும் இடையரும் எவ்வாறு பொருந்திநிற்கும்? இவ்வினவிற்கு விடையளிக்கும் முகத்தால் ஏடர்ச்சொல்லின் உற்பத்தியை இனி ஆராய்வோம். பழந்தமிழில் யாட்டின்பெயராகநின்ற "எலி"ச்சொல்லே ஏடர்ச்சொல்லிற்கு உற்பத்தியாம் என நாம் சொல்லின் நம்மை எள்ளி நகைப்பாரும் உளராகலாம். (ஞாயிறு பத்திரிகையில் I. 319 நாம் வரைந்த "செம்மலியும் கம்பலமும்" எனும் விஷயங் காண்க). ஆயின், பல மொழிகளுள்ளும் காலகதியிற் சொற்கள் நடத்தியிருக்கின்ற திருத்தாண்டவங்களுள் இதுவும் ஒன்று. முன்பு யாட்டுக்கு எலி எனப் பெயர் பொருந்திய வரலாற்றை "ஞாயிறு" பத்திரிகையினின்று எடுத்துச் சொல்லுவாம்.

"பழந்தமிழில் எல் எனுஞ் சொல்லொன்று உண்டு அன்றோ? அதன்பொருள்:—எழுகின்றவனாகிய சூரியன் என்பது அன்றோ? எழு, எடு, ஏகு, ஏறு ஆதியன மேல்நோக்கி இயங்கும் பொருளுள்ள தலையடிச்சொற்கள். "எழு" எனும் அடிதான் "எல்" என்றாயிற்று. "எல்"லை எழுவான் எனவும் அழைக்கின்றனமே. அப்பால், எல் எனுஞ் சொல், சார்புபற்றி, அவ் எழுவானின் பிரகாசத்தைக் குறித்தது. இப் பிரகாசப்பொருள் உள்ள "எல்" ஆனது எல்-லே (= வெளியே) எல்-லார் (=வெளிச்சத்தில் உறைவோர், தேவர்), ஏல (=வெள்ளென, வெளிச்சத்தோடு) ஆதிய உருவங்களை அடையும். இவ் வுருவங்கள் யாவற்றிலும் பிரகாசத்தன்மை ஓரோர்படித்தாய்க் குறிக்கப்படுதலை நோக்குக. வெளி-ச்சம், வெளி-யே, வெள், வெள்-ளை ஆதிய உருவங்களையும் எல் எனும் அடியினின்று வகர முதனிலைமெய்பெற்று வந்தன என்றலும் ஒன்று. (வலியுறுத்தும் முதனிலைமெய்களைச்சுட்டிய வெளிப்படையை எமது "சொற்பிறப்பாராய்ச்சி" நூலினுட் காண்க). பழந்தமிழ்ப் பாகதங்களுள் ஒன்றாகிய சிங்களத்தில் எமது வெளி-ச்சம், வெளி-யே ஆதிய சொற்கள்

வகாரமாகிய முதனிலைமெய் இன்றி எலி-ய, எலி-யே ஆதியனவாக இன்றைக்கும் பயிலுகின்றன. பழஞ்சொல் முறையில் எல் என்பது வெளிச்சமாகவே, எலி என்றது "வெள்ளையானது" எனப் பொருள் தரும். வெள்ளையானது எனும் இக்குறிப்பால் வெள்ளைமிருகமான யாடு பெயரிடப்பட்டது எனக் காண்க. வெள்ளைச்சொல்லின் ஆதி உருவமாகிய எலி எனும் பெயர் சிங்களித்தில் இன்றைக்கும் எளு என நின்று யாட்டுப்பெயராம். இதனாலன்றோ யாட்டுக்கு "வெள்ளை"யெனத் தமிழிலும் ஒரு பெயர் உளது? (பிங்கலந்தை, 8, 174)"

வெள்ளைநிறக் காரணத்தால் நமது வீட்டெலியும் எலிப்பெயர் அடைந்துவிட்டமையால், யாட்டின் எலிப்பெயர் ஏழ என வைக்கப் பட்டது. (ஏழகம் எனும் உருவமே நூல்வழக்கிலிருப்பினும், தமிழ்ப் பாகதங்களினும் வடமொழியினும் ஒப்புமையால் ஏழ என்பதுதான் ஆதித்தமிழுருவம் எனத்தோன்றும்: மேல் வருவன காண்க). பழையநூல்களில் எலி எனப்பட்ட யாடு (உ-ம் சீவக சிந்தாமணி. 2686) சிங்களத்தில்மட்டும் அப்பெயரோடு நின்று விட, பிந்தியநூல்களிலும் பிறபாகதங்களிலும் வேறு வேறு உருவங்களை அடைந்தது.

தமிழ்—எலி, ஏழ, ஏழகம், ஏடகம், ஏரகம், ஏணை, மேழகம், மேடம், யாடு, ஆடு.

சிங்களம் — எலு, எளுவா.

தெலுங்கு—ஏட, மேஷமு, மேக (மே [ழ] க)

கூயி — ஓட

குறாக் — ஏரு

மலற்றோ — எறெ

கோண்டி — யேற்றி (மறியாடு)

பிருகூயி — ஹேற் (மறியாடு)

துளுவம் — யேடு

மலையாளம் — ஆடு

எட, எரு எனும் உருவங்களுளொன்றில்நின்று எடர் எனுஞ் சொல் வந்தது என நன்றாக நிச்சயிக்கக் கிடக்கின்றது. இனி இடையர் எனுஞ் சொல்லும் எடரில்நின்று ("கேளன்" கிளைஞன் என வந்தவாறு) பரிணமித்தது எனக் கொள்ளலே தகுதி. அன்றி, எறை எனும் உருவத்தை அடியாகக்கொண்டு, "எறையர்" இடையர் என மாறியிருத்தலும் சாலும். றகரமும் டகரமும் தம்முள் மாறுதல் தமிழில் இயல்பு.

அப்பால் எமது எலி, எழ, எழகம், எட, எடகம், எணை, யாடு, ஆடு எனும் உருவங்கள் பிறபாஷைகளில் கொள்ளுகின்ற நிலையையும் காட்டுதும். சுமேரியத்தில் எலிம் எனுஞ்சொல் யாட்டுக்கு வழங்குகிறது. அச்சொற்குச் சித்திரலிபி ஒரு செம்மலியாட்டின் தலையே. வடமொழியில் எட, எண, எடக, மேஷ, மேஷக, கம்பல (கெம்-எலி) எனும் உருவங்கள் உள. லத்தினியத்தில் ஹேடுஸ், ஆரியெஸ் எனும் இருசொல்லும் யாட்டைக்குறிக்கும். எகிப்தியத்தில் அயில் கலைமான்பெயர். கிரேக்கத்தில் எரி-பொஸ் ஆட்டுக்குட்டி; எல்-லொஸ் மான்குட்டி; அல்க்கே, மரை. லித்துவேனியத்தில் எர-ஸ் ஆட்டுக்குட்டி. பழஞ்சர்மனியத்தில் எல்கோ, லத்தினியத்தில் அல்சேஸ், பழம் ஆங்கிலத்தில் எல்க்கெ, ஆங்கிலத்தில் எல்க் என இவை யாவும் மரையைக் குறிக்கும்.

இன்னன பல ஒப்புமைகளும் உற்பத்தி விநோதங்களும் எமது சொற்பிறப்பு—ஒப்பியல் அகராதியில் வெளிவரும்.

தலைவன் பாங்கியை உடன்படுத்தல்.

435. பூமகள் கேண்மையைச் செய்தா யெனக்கந்தப் பூமகள்சேய்
நாமகள் கேண்மை பெறக்கொண்டு மேவுவ னுன்விரைந்தக்
கோமகள் பாற்றுனி மேவாமற் காத்தருள் கோதில்வரை
மாமகள் பால்வள ரெம்மான் சிராமலை வாணுதலே. (ச)

பாங்கி உடன்படுதல்.

436. கண்ணும் வடிவமு முச்சுட ராகுங் கருணைப்பிரான்
நண்ணு மெழில்வள மோங்குஞ் சிராமலை நாடுமன்னு
உண்ணு மமுதி னினிதான பேரின்பத் தொன்றுமவர்க்
கெண்ணு மெழுத்தும் விழியா மெனினென் னியம்புவதே. ()

பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

437. எழுத்து முதற்பல நூற்கட னீந்திட வென்றுலகம்
வழுத்து நினதன்ப ரேகினர் தேவர்க்கும் வாய்ப்பரிதாய்ப்
பழுத்து வளரன் புறவென் னுளத்துப் பரிந்தருளால்
அழுத்து மலர்ப்பதத் தம்மான் சிராமலை யாயிழையே. (சு)

---

435. பூமகளென்றது தலைவியை. பூமகளின் சேய் நாமகள் - திருமகளின்சேயாகிய பிரமதேவரது நாவிலுள்ள மகள்; கலைமகள். விரைந்து மேவுவன். துனி - புலவிநீட்சி.

436. கண்முச்சுடர்; வடிவம் முச்சுடர் (மூன்று அக்கினிகள்); 'இறைவன் கூறுகிய முத்தீக் குண்டத்திட்டதனைக் கூறிற்று' (முருகு. 254, ந.) எண்ணுமெழுத்தும் விழியாம்: "எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்" (கொன்றைவேந்தன்); "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும், கண்ணென்ப வாழு முயிர்க்கு" குறள், 392.

437. எழுத்துமுதல் - எழுத்திலக்கணம் முதலிய. நூற்கடனீந்திட: "கல்வியென்னும் பல்கடல்" (திருவாசகம்); "ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர்" கம்ப. அரசியற். 5.

கார்ப்பருவங்கண்டு தலைவி வருந்தல்.

438. கோபஞ் செறிதர மாலுற வார்த்துக் குடிலமுற்றுச்
சாபங் கொடுபடர்ந் தாரம்பு பெய்து தடித்தெதிர்ந்தியான்
தாபம் பெறவரு மென்றன்பர் தேர்கலை சாற்றலின்றே
பாபந் தவிர்த்தெனை யாள்வோன் சிராமலைப் பான்மொழியே.

வருந்திய தலைவியை ஆற்றுவித்தல்.

439. கற்றிடு கல்வியி னெல்லை யுணர்தலிற் காதலர்தாம்
சொற்றிடு வாய்மை தவறார்பொற் றேரொடு தோன்றுவர்நீர்
பெற்றிடு காருட னீயினி வாடல் பெரிதுமகிழ்
வுற்றிடு தென்கயி லாய ரருளன்ன வொண்ணுதலே. (அ)

௩௦. காவற் பிரிவு.

காவற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

440. பூமாது கேள்வ னெனநீ யெனைச்செய்த பொற்பதனாற்
பாமாது கேள்வன் படைத்திட வோங்கிப் பரந்தநெடும்
பூமாது வாழப் புரந்திடப் போதுவன் பொன்னிமய
மாமாது வாழிடப் பாகன் சிராமலை வாணுதலே. (க)

---

438. மேகத்தின் செயல்களைப் பகைவருடைய செயல்களாகத் தோற்றும்படி தலைவி கூறுகின்றாள். கோபம் - இந்திரகோபம், சினம். மால்- மேகம், மயக்கம்; எழுவாய். குடிலம் - ஆகாயம், வஞ்சகம். சாபம் - வில். அம்பு - நீர், பாணம். தடித்து எதிர்ந்து - மின்னலுடன் எதிர்ந்து, பருத்து எதிர்ந்து. தேர்கின்ற கலையானது சாற்றாதோ.

"அயங்காட் டியமறை யார்விடை யாள ரருணைவெற்பிற், புயங்காட் டியமணித் தேர்வல வாமுன்பு போனகொண்டல், சயங்காட்டிக் கோபமுஞ் சாபமுங் காட்டித் தடித்திடித்துப், பயங்காட்டி நலஞ்சு மேதனி யேநின்ற பைங்கொடியே" (அருணைக்கலம். 48) என்பதனோடு இஃது ஒருவாறு ஒத்துளது.

439. காருடன்-மேகத்தால். காருடன் தோன்றுவரெனலும் ஒன்று.
பி-ம். 'வாய்மை திறம்பார்'

440. பூமாது கேள்வன் - திருமால்; இங்கே பூமாதென்றது தலைவியைச் சுட்டியது. பாமாது கேள்வன் - பிரமதேவர். பூமியாகிய பெண் வாழும்படி. இமய மாமாது - உமாதேவியார். நீ என்னைச் திருமாலாகச் செய்ததனால் அதற்கேற்பக் காத்தற்றொழில் புரியும்படி செய்வாக என்பது நயம்.

காவற்பிரிவு பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

441. பூபா லகரென யாவரும் போற்றிப் புகழ்பரிசால்
மாபா ரகமுற்றுங் காத்திட வேண்டிநம் மன்னர்சென்றார்
கோபா னலத்தெதிர் கூற்றுவற் கென்னைக் கொடாதருள்செய்
காபாலர் தென்கயி லாயத்தின் மேவுங் கனங்குழையே. (உ)

தலைவி கூதிர்ப்பருவங்கண்டு வருந்தல்.

442. உடலைத் துளைத்தென தாவியை வாடை யுருக்குகின்ற
நடலைக் கினியென்ன செய்குவன் காவலர் நண்ணகிலார்
கடலைப் பருகிய மாமுனி போற்றக் கருணைசெய்தோன்
அடலைப் பொடியணி யெம்மான் சிராமலை யாயிழையே. (௩)

தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்.

443. கூட விழைத்திழைத் தங்குலி தேயக் குழைந்துமனம்
வாட லினியரன் வாழுஞ் சிராமலை மானுமன்னர்
தேட வருமகிழ் வெய்தத்தந் நாட்டினைச் சேர்ந்தளித்து
நீட வரும்புகழ் கூடவந் தெய்தினர் நேரிழையே. (௪)

௩௧. தூதிற் பிரிவு.

தூதிற்பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

444. எதிர்த்தெழு வீரத் திணைந்திரு வேந்த ரிகலியொள்வாள்
விதிர்த்தெழு வீசிநின் றுரைநட் பாக்க விரைந்துசெல்வேன்
கதிர்த்தெழு பூண்முலை மான்வருந் தாவகை காத்தருள்வாய்
அதிர்த்தெழு மால மயின்றோன் சிராமலை யாயிழையே. (க)

---

441. கோபானலத்து - கோபாக்கினியுடன். காபாலர் - காபாலமென்னும் கூத்தையுடையவர்.

பி-ம். 'பூபாலர் தாமென'

442. வாடைநடலைக்கு - வடகாற்றினுடைய வஞ்சனைக்கு. ஆவியை உருக்குகின்ற வாடையென இயைக்க. கடலைப் பருகிய மாமுனி - அகத்திய முனிவர். அடலையாகிய பொடி - திருநீறு.

443. கூடல் - கூடற்சுழி; 290-ஆம் செய்யுளின் குறிப்பைப் பார்க்க. அங்குலி - விரல். தேடுதற்கு அரிய மகிழ்வு.

444. வீரத்து இணைந்து - வீரத்தோடு பொருந்தி. இகலி - பகைத்து. எழு - வளைதடி.

தூதிற்பிரிவு பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

445. ஓரா திகலிரு வேந்தர் பகைமை யொழித்துநண்பாற்
பேரா தகமகிழ் வார்விக்க வேண்டிப் பிரசமலர்த்
தாரார் புயத்தன்பர் தாமகன் றூரென்றுந் தன்னடியார்க்
காரா வமுத மனையான் சிராமலை யாயிழையே. (௨)

தலைவி முன்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

446. கூற்றந் தனைநிகர் முன்பனி யென்னுயிர் கொண்டிடுவான்
சீற்றஞ் செயுமிஃ தோராமல் வேந்தர் தெறுபகைதீர்த்
தேற்றம் பெறுநட் புறுவிக்க நம்மன்ப ரேகனன்றே
தேற்றம் பெறநமை யாள்வோன் சிராமலைத் தேமொழியே. ()

தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்.

447. பாந்த ளணிசடை யெம்மான் சிராமலைப் பாற்றிகழும்
சாந்த மணிமுலை யாய்முன் பனிக்குத் தளர்தியென்றுன்
காந்த ரறிந்தெழிற் றேரூர்ந் தியங்கள் கலிப்பவிரு
வேந்தர் பகைதணித் தெய்துவர் நீயின்ப மேவுறவே. (௪)

௩௨. துணைவயிற் பிரிவு.

துணைவயிற்பிரிவு தலைவன் பாங்கிக்கறிவுறுத்தல்.

448. சீர்மிகு மோரிறை யொன்னார் பலரொடு செய்சமர்க்கியான்
தார்மிகு தானைகொ டேகுதல் வேண்டுந் தகுந்துணையாக்
கார்மிகு கண்டத்த னெம்மான் சிராமலைக் காரிகையாய்
கூர்மிகு வேல்விழி வாணுத லாட்கிது கூறுகவே. (௧)

---

445. ஓராது இகல் - உணராமல் பகைக்கின்ற. அகமகிழ்வை ஆர்விக்கவேண்டி. ஆரா அமுதம் - தெவிட்டாத அமுதம்.

447. பாந்தள்-பாம்பை. தளர்தியென்று - தளர்வாயென்று எண்ணி. இயங்கள் - வாத்தியங்கள். மேவுற எய்துவர்.

448. துணையாக ஏகுதல்வேண்டும்.

பாங்கி தலைவிக்கறிவுறுத்தல்.

449. தமரா மொருபெரு வேந்தர் படையொடு சார்பகைஞர்
அமரா லயர்வ தகற்றத் துணைக்குநின் னன்பர்சென்றூர்
கமரா மதிகங்கை வேணியிற் றாங்கிச்சங் காழிகையில்
அமரா னுயர்த்தரு ளெம்மான் சிராமலை யாயிழையே. (௨)

தலைவி பின்பனிப்பருவங்கண்டு வருந்தல்.

450. இன்பம் விளைத்திடு மெம்மான் சிராமலை யேத்துநம
தன்பர் தமதுற வாகு மரசர்க் கருந்துணையா
வன்ப ருடனம ராடச்சென் றூரின்னம் வந்திலரால்
துன்ப முறுபின் பனிக்கெவன் செய்குவன் றூமொழியே.(௩)

பாங்கி ஆற்றுவித்தல்.

451. பந்தன மாமுலை மானே வருந்தல் பகைதடிந்து
சந்தன மார்வரை மன்னனைக் காத்துத் தயாவுடன்மீண்
டிந்தன வாணுதல் பாகன் சிராமலை யேத்துமன்பர்
வந்தனர் நீபின் பனியால் வருந்தும் வகையுணர்ந்தே. (௪)

௩௩. பொருள்வயிற் பிரிவு.

பொருள்வயிற்பிரிவு தலைவன் பாங்கிக் கறிவுறுத்தல்.

452. பொருளா லிகபர மென்னுமுன் னீர்கண் பொழியவுள்ளம்
மருளா வயர்ந்தன டீநீர் தெளித்துடன் மாற்றமின்னே

---

449. படையொடு சார்ந்த பகைஞர். கம் அரா மதி கங்கை - தலையையும் பாம்பையும் சந்திரனையும் கங்கையையும். சங்கு ஆழி கையில் அமர் ஆன் - சங்கும் சக்கரமும் கையிற் பொருந்திய திருமாலாகிய இடபத்தை.

450. வன்பருடன் - வன்மையையுடைய பகைவருடன்.

451. பந்து அன்ன. பகை தடிந்து - பகைவரை அழித்து. இந்து அன - பிறையை ஒத்த. வருந்தும் வகையுணர்ந்து வந்தனர்.

452. இன்ன - இவ்வளவு. தலைவன் முன்நிகழ்ந்த செய்தியை நினைந்து கூறியது இச்செய்யுள். "முனிவரு மன்னரும்" (திருச்சிற். 332) என்னும் செய்யுளையும் அதன் அவதாரிகையையும் விசேடவுரையையும் பார்க்க;

வெருளா வெழுந்தின்ன நாட்சென்றதோவிங்கு மேவவென்று
தெருளா வணங்கிடு மெம்மான் சிராமலைத் தேமொழியே. (க)

பாங்கி தலைவிக் கறிவித்தல்.

453. நல்விற் பனர்தொழு மெம்மான் சிராமலை நாடலர்போல்
வல்விற் கிணைமுலை வாணுத ணுந்தனி வைகவின்று
கல்விக் குரிய பொருண்முற்று மன்பர் கடற்பிறந்த
செல்விக் குரிய பொருண்முற்று வானெண்ணிச் சென்றனரே. (உ)

தலைவி இளவேனிற்பருவங்கண்டு வருந்தல்.

454. நற்ருய் வெறுத்திடக் கோடாய் முனிய நலிவுறுபுள்
பற்ரு ரெனவறை கூவவென் ணுவி பதைக்குநிலை
கற்ருர் பெறநிதி தேடச்சென் ருரொன்றுங் காண்கிலரன்
புற்ருர் பணிபதத் தெம்மான் சிராமலை யொண்ணுதலே. (ஙு)

"திரைகட லோடித் திரவியந் தேடென்று செப்புமௌவை, உரைபழு தன்றெனச் சோர்ந்தாள் கழுக்குன்றத் தோர்மடமான், அரைபணி நீர்ச்சர் தனங்கொண்டு பாங்கிய ராற்றியபின், இரைகடல் போய்வர வெத்தனை நாளென் றெழுந்தனளே" தனிப்.

பி-ம். 'எண்ணில்நாட்'

453. விற்பனர் - விவேகிகள். வல் - சூதாடுகருவி; வல்லுக்கும் வில்லுக்கும் இணையாகிய வென்க. கல்விக்குரிய பொருள் முற்றும் அன்பர்- கல்விக்குரிய காரியத்தை முடித்த அன்பர். அன்பர் சென்றன ரென்க.

454. நற்ருயென்றது குயிலையும், கோடாயென்றது காக்கையையும்; கோடாய் - செவிலித்தாய். புள் - குயில்; "வேள் அக்காளமார்க்கு மிளவேனில்" (455) என்பர்பின். நற்ருய்......புள்: "வருந்தி யீன்ருண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந்தாள், முருந்தின் காறுங் கூழையை முனிவார் நின்னை யென்முனிவார், பொருந்திற் ருன்ரு விதுவென்ருய் பொன்று மளித்திவ் வுயிரென்னுப், திருந்து சோலைக் கருங்குயிலே சிலம்ப விருந்து கூவுதியால்" (சீவக. 1661); "உயிர்த்த பொழுதே நின்குரல் கே ளாமுன் ஞேடிற் றீன்றதாய், நயத்தின் வளர்த்த தாய்குரல்கேட் டலுமே நடுங்கத் தூரந்ததால், பயத்த மலர்ப்பூங் காவகத்தி லிருந்து பல்காற் கூவினுற், செயிர்த்து நின்னைக் குயிலேநான் வெறுத்தல் செப்ப வேண்டுமோ" (பிரபு. பிரபுதேவர். 63.) போர்செய்தற்கு மன்மதனை அழைப்ப. சென்ருர் - தலைவர். ஒன்றும் - சிறிதும். நிலையைக் காண்கிலர். அன்பு உற்ருர்- அன்புள்ள அடியவர். கற்ருர் பெறும்பொருட்டுத் தாம் நிதிதேடச் சென்ருர்.

தலைவியைத் தோழி ஆற்றுவித்தல்.

455. மைக்காள கண்டர் சிராமலை யன்னநம் மன்னர்வட
திக்கா ளரச னிகர்ப்ப நிதிக்குச் செலினும்வில்வேள்
அக்காள மார்க்கு மிளவேனில் வந்த தறிந்திலர்கொல்
இக்காரும் வாணி வருந்தலென் னேவொல்லை யெய்துவரே. (௪)

தலைவன் வந்தமை பாங்கி தலைவிக் குணர்த்தல்.

456. கொந்தார் தருமட்டு வார்குழல் பாகன் குளிர்புனலார்
இந்தார் சடைமுடி யெம்மான் சிராமலை யேந்திழையாய்
சிந்தா குலமுறல் சின்னங்க ளார்த்திடத் தேரிலன்பர்
வந்தாரிவ் வேனிலில் வந்தா ரெதிர்கொடு வந்திப்பையே. (௫)

தலைவன் வந்துழி மகிழ்ச்சி.

457. உருவார் மதனென நீயிள வேனிலி னுற்றதனால்
மருவார் மலர்க்குழ லெம்பெரு மாட்டி மனமகிழ்வாற்
பெருவாழ் வெனவள ரானந்த போகத்தைப் பெற்றினிதாய்த்
திருவார் சிராமலை யெம்மா னருளெனச் சீர்கொண்டதே. (௬)

வாழ்த்து.

458. வாழி மறையவர் வானவ ரானினம் வாழிசைவர்
வாழி மதிதொறு மும்மாரி பெய்தருள் வான்முகில்கள்
வாழி மனுநெறி மன்னவர் நாவலர் வையமெல்லாம்
வாழி சிராமலை யெம்மா னுடன்மட்டு வார்குழலே.

சிராமலைக்கோவை முற்றும்.

---

455. காளம் - விடம். அரசன் - குபேரனை. வேளின் காளம் - குயில். இக்கு ஆரும் வாணி - கரும்பை ஒத்த சொல்லை யுடையாய். ஒல்லை-விரைவில்.

456. கொந்து - பூங்கொத்து. புனலும் ஆரும் இந்துவும் ஆர்ந்த; ஆர் - ஆத்தி. உறல் - அடையாதே. வந்து ஆர் - தென்றற்காற்று ஆர்ந்த.

457. எம்பெருமாட்டி மனம் சீர்கொண்டது.

458. வாழி மறையவர் வானவ ரானினம்: "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" (தே. திருஞா.) மதிதொறும் - மாதந்தோறும். முகில் - மேகம்.

உ

செய்யுண் முதற்குறிப்பகராதி.

[எண் - பக்க எண்.]

வேறு.

1664 இட்டதென் முன்ன ரெதிரர ணனவே
யிடதுகைக் கிடுகொடுங் கடுகி
முட்டினன் வயிர வாட்படை யதனன்
முரணமர் பாறையைக் குறைத்தான்
வட்டவான் கிடுகை முசலம தோச்சி
வழுவையும் புடைத்தொடித் திடலால்
ஒட்டிநின் றுளவாட் படையொடு முசல
மொருங்குடுக் கணமென வுதிர்ந்த. (ருo)

1665 வழுவறு முசலத் துடன்கைநாந் தகமு
மடிந்திட மறிந்துமோர் முருட்டுக்
கொழுமுனை முசல மதனைவா ரணங்கைக்
கோடும் வேடனுங் கரத்தாற்
றெழுதெடுத் தனனோர் வைந்நுதி வயிரச்
சூலமொன் றதனையே பலகாற்
கெழுதகை யுடனே தடுத்தெதி ரெறியக்
கேடுபட் டனவிரு படையும். (ருக)

1666 நஞ்சினுட் பயின்ற வெவ்வழற் சீற்ற
நமன்கொலைத் தொழில்படிற் றெழுக்கர்
வஞ்சமென் பவற்றை யளவளாய்ச் சமைத்தான்
மறித்தொரு வயிரவாட் பூட்டி
வெஞ்சம முருக்கி யினியொரு கணத்துள்
விளிவளிக் குவனெனு வாடற்
குஞ்சர முகத்தி னேங்கியே குறுகிக்
குரைகட லெனக்குரைத் தெறிந்தான். (ருஉ)

1667 மத்தகத் தயல தாகவே வீழ்ந்து
வைநுதி பயின்றதோர் வாமப்
புத்தவெண் பிறைக்கோட் டினையறுத் திடவப்
பொழுதது பொழிந்தது தாளங்

கத்துதெண் டிரைநீர்த் திவலைபோற் களிற்றின்
கவுட்கடாங் கரிமத முயிர்ப்பச்
சுத்தவொள் ளழலைத் திசைதொறும் பனிற்றிச்
சுழன்றன வுபயகண் களுமே. (ருங)

1668 நீலநன் மணியா லவயவி யுடனே
நீடிய வவயவம் பலவாஞ்
சால்பினி லமைத்த தொருகிரி முகட்டிற்
சாதிவச் சிரத்திரு சிகரம்
வாலிதி னிழைத்த வவற்றிடி விழுந்தோர்
மருங்கிடிந் தழகிழந் ததுவே
போலடு படையி லொருமருப் பிழந்து
பொலிவழிந் தது[1]மதக் களிறே. (ருச)

வேறு.

1669 உக்கவெங் குருதி யாறு
மொற்றைவெண் மருப்பு முத்து
மக்களத் திருபாங் குற்ற
வடுபடைக் கரனு மாவுஞ்
செக்கரும் பிறையும் வானிற்
றிகழுடுக் கணமுங் கூண்டு
புக்கொளிக் கொதுங்கி நிற்குங்
காரிருட் பொருவு மன்னோ. (ருரு)

1670 கறுத்தவ னறுத்த வென்றிக்
கதிர்மறுப் பகல பாரம்
பொறுத்ததிக் கயமோ ரெட்டும்
பொறுக்குமே லவற்றி னுற்ற
லொறுப்பதொன் றென்று வானோ
ருரைத்தலு மதனைக் கைக்கொண்
டறுத்திடா மருப்பின் மேல்வைத்
தண்டமீ துயர்த்த காலை. (ருசு)

[பி-ம்.] [1] மத களிறே. சா.

1671 புவனமீ துறைந்த மாயோன்
பொன்னடி போற்றி யொண்மைத்
தவமுயன் றிளைய திங்க
டன்பதம் வாங்கிக் கொண்டு
குவலையத் தினிற் படிந்த
கொண்டன்மே லுதிப்ப தென்னாக்
கவலையுற் றனனு வீரெண்
கலையுளான் கலக்குற் றனே. (ருள)

இரண்டுந் தொடர்

1672 இற்றவெண் மருப்பின் செய்மை
யென்னெனப் புகல்வே னுசைக்
கொற்றவெண் கரிகட் குற்ற
கோடுக ளனைத்து மொன்றாய்
முற்றுறக் கொளுத்தி னாலு
முவமையின் முற்றா தென்றான்
மற்றதற் குவமை கூறின்
மற்றைய துவமை யாமே. (ருஅ)

1673 உடைத்தெழுங் குருதி வெள்ளத்
தொழுக்கினை யொருத்தல் வெங்கட்
கடைக்கனல் கொளுத்திக் கையாற்
கதிர்மருப் பேந்தி நிற்றன்
முடப்பிறை பகுவாய்க் கௌவி
மொய்வரைச் சென்னி நின்றோ
ரடற்கரு மிராகு விண்டோய்ந்
தனையதோன் றென்ன லாமே. (ருகூ)

1674 எடுத்தவெண் மருப்பை வானத்
திடியென முழங்கி நேரே
விடுத்தனு நீல வெற்பு
விழுதுவிட் டனைய தோற்றந்

கடுத்தநீ ளிடக்கை யீர்ந்து
கதுமெனக் குருதி யாற்றுண்
மடுத்தது மறித்தும் புண்ணீர்
மற்றது களத்துண் மன்னே. (சூ0)

வேறு.

1675 ஒற்றைக் கரத்தாற் கோடுதலை
யொருபாங் குறலான் மூன்றுகடப்
பொற்றைத் தவளக் கரிப்பாகைப்
புறங்கண் டுயர்விண் புகவிடலாற்
றுற்றற் குறுவே ழத்தினையே
தொடர்ந்து துழனிச் செருவிளைக்குங்
கொற்றத் திறத்தால் வேடுவனுங்
கொலைமா களிறுாத் தனன்மன்னே. (சூக)

1676 பொடிக்கு மருண நிறவானைப்
பொருவு மெருவைப் பொருகளத்துட்
டுடிக்குங் கடகத் தடக்கையினைத்
துறக்கத் திடைக்கண் டமரர்குழா
நடிக்குங் கருமா சுணமெனவே
நவிலத் துடித்த வலமுயிரைக்
குடிக்குங் கணிச்சி நமற்கும்வலக்
கொடுங்கண் டுடிக்கத் துடங்கியதே. (சூஉ)

1677 சோரிப் பெருநீ ரிடைத்துடிக்குஞ்
சுடர்கூர் தடக்கை யினையுடலம்
பூரித் தெடுத்தான் கிம்புரிபோற்
புணர்கைம் மருப்பிற் புடைத்தலுமம்
மூரிப் பிணர்க்கை பிசைந்ததனை
முன்னிட் டதுகா ரரவுநுகர்
காரிற் பிறையைச் செந்நாகங்
கண்ணுற் றிடக்கா தியதெனவே. (சூ௩)

1678 தோளிற் றெலைந்து குழம்பெனலாய்ச்
சோரி குளிக்கச் சொலிசினத்தீக்
கோளிற் குளித்த திருக்கடைக்கண்
குளிறி நடிக்கக் குரைத்தகழற்
றாளிற் றாணி படும்பூழி
சலதி குளிக்க விதிர்த்தெடுத்த
வாளிற் குளித்த துடுக்கணமு
மழைமே னிழல்வெண் மதியமுமே. (௬௪)

வேறு.

1679 இடித டித்தொடு திமிர வெற்பினி லிவர்மு கிற்றிரள்போல்
வெடிப டக்குளி றுபுசி னத்தழல் விழிப னிற்றிடவே
கடிம தக்கவு ணதியு டைத்திழி கரியின் மத்தகமீ
தடியெ டுத்தொரு குதிகு தித்தன னதிம றத்தினனே. ()

1680 இழிதொ ழிற்படு கொலைம றத்தின னெழுத லுற்றகல்வான்
வழிம றைத்ததொர் பணைம ரத்தினை வளர்ப னைக்கையினு
லுழுதெ டுத்தெழு வெனவ டித்தலு முடல்ப தைத்தனனு
விழிக னற்றிட விதழ்ம டித்தயல் விழுத லுற்றனனே. ()

1681 விழுகொ லைக்குல திலகன் மெய்ச்சுரர் விழிந டுக்குறவே
பழும ரப்பணை விழுதெ னப்புடை படர்க ரத்தினில்வாள்
கெழுத கைப்பிறை யெயிறி டுக்குபு கிளர்பொ ருப்பினையே
யுழுதெ டுத்திப முகமு தைத்தன னுயிர்து னுக்குறவே. ()

1682 வடதி சைக்கிரி புரையு டற்கரி வளைம ருப்புறவே
யிடமு டைச்செவி யொலிபு டைத்தெறி தரநி லத்திழியா
விடமொ ழுக்கிய துளையெ யிற்றழல் விழிகொ ணெட்டரவார்
படமு டைப்பஃ றலைநெ ளித்தெழு படிநெ ளித்தனவே. ()

வேறு.

1683 பின்னும் வெண்ணிணம் பனிற்றடு படைவலம் பிடியா
மின்னின் வல்விரைந் தோங்கிவைத் தழுத்திவீ சுதலு
மின்ன லெய்திய விகல்விளை பனைக்கைகூர்ப் பரத்தாற்
கன்ன தாளமற் றிற்றது முந்திடக் கறைத்தாள். (௬௯)

1684 என்று மூன்றுதாட் கிரிபுடைத் தெதிரெதிர் குந்தி
யான்ற கோளரா வரைபிணித் தெனவடு கரத்தால்
வான்ற னுக்குற வளைத்துடன் மறுகவே பிழியக்
கான்ற வார்மயிர்ப் புடைதொறுஞ் சோரியாங் கலுழி. ()

வேறு.

1685 நெட்டுடலம் புண்ணீர்பெய் திழிதரவே
கொலைவேட னெடுங்க ணோக்கிற்
கட்டழல்பொங் கிடத்துனையிற் பொருமிநெடு
மூச்செறிந்த காலை வேலை
கொட்புறமந் தரப்பொருப்பிற் சுற்றியமா
சுணமாலங் குதிக்க யாப்பு
விட்டதுபோன் றடுகளிற்றி னிரும்பிணர்க்கை
யுறுபிணிப்பு விட்ட தன்றே. (எக)

1686 மதநாகங் கதுமெனப்பாய்ந் தொருதனிவெண்
பிறைமருப்பான் மார்பம் போழ்ந்த
கதநாகக் கடுவுறழ்வெஞ் சினவேட
னுயிர்பருகக் காலை மாதோ
வஃதுடைற் றனிமருப்பு மடுகாமும்
வடிவாள்வைத் தழுத்தி யீரா
முதனாள்வந் தெழுந்தசினத் தழலவனோ
டதனுயிரை முடித்த தன்றே. (எஉ)

1687 கூனார்வெண் பிறைமருப்பிற் பனைத்தடக்கைக்
கறைபுரைதாட் குன்றி னோடு
மானுது மறந்தழைத்த வைந்நுதிவாள்
வேடுவனு மழலு நோக்கி
னேனைமை யமர்விளைத்த கொலைக்களத்திற்
கொழுங்குருதி நுரைசே ராறு
மீனார்தென் கடற்புகவச் செருக்களமட்
டெதிர்ந்தனபன் மீனு மன்னோ. (எ௩)

1688 கோணைவான் புனற்பொருநைக் கணித்தாயுங்
கொழுங்குருதிக் கூட்ட மாயோ
ரூணையாற் படைக்கலம்போன் றயல்படவே
யிழிந்தளக்க ரடைந்த வாற்றாற்
றாணையா டகன்புடைப்பத் தோன்றவனு
ளளக்கர்நிலந் துற்று வாறும்
வீணைவான் கலைதெரிவோர் முனிவரிற்சந்
தயமறவே வியந்துற் றாரே. (எச)

1689 உலங்களினைப் பொருபுயத்தான் கிளைத்தெறிந்த
பருப்பதங்க ளொருகை மாவி
னலங்கலுறு பிணமருப்போ டிகல்விளைத்துப்
புறக்கொடைசார்ந் தாதி மூதூர்
நிலங்களினோர் கெமியாது விசும்புறத்தென்
றிசைக்கெமிக்கு நிலைமை நாடி
விலங்கலெனும் பெயரவற்றிற் கிடுகுறியன்
றெனப்புவனம் விளம்பு மாதோ. (எரு)

வேறு.

1690 இடங்கொள் போர்க்களத் திழிகுரு தியின்றுளி முடைநாற்றங்
கிடங்க தாந்திசை தென்றிசை மேற்றிசை கிளர்கால்க
ளடங்க வேமுகந் தெதிர்செலு மவற்றையந் நகர்நேரே
வடந்தை தான்முகந் தெதிர்செல நினைந்திடா வகைத்தாமே. (எசு)

வேறு.

1691 கொழுங்குருதிக் கடலகத்தா யடுகளிற்றின்
முனஞ்சுடர்வெண் கோடு மீவான்
விழுங்கியசெக் கரிற்செறியு மழைநுனிசார்
மதிப்பிளவு மிளிர்வ தேய்க்கும்
புழுங்கியவெஞ் சினநமனும் வெருக்கொளவே
டுவன்கிடத்தல் பூவின் மார்பத்
தொழுங்குபடும் பொற்கலத்தி னடுக்குபின்ற
கருமணியி னொளியே மானும். (எஎ)

வேறு.

1692 வாழ்ந்த தேயருந் தவமுநல் லறமுநான் மறையு
மாழ்ந்த தேகொடும் பவமுடன் மறமும்வஞ் சகமுந்
தாழ்ந்த தேநமன் மதுகையு மினியுயர்ந் தநெஞச்
சூழ்ந்த தேவரிற் சூழ்ந்தன ராண்டுறை துறவோர். (எஅ)

1693 சூல மேந்திய மறலியாற் றலுங்கொலைத் தொழிலும்
நீல மேனியின் பணைப்புமீங் கிவனொடு நினையி
னுலி னென்றுள னென்பதா லவனைநா னிலமுன்
கால னென்பதும் யோகமா மெனக்கரு தினரால். (எகூ)

1694 விண்ணு ளார்களின் மறலிவா னவர்கண்மெய் முழுதுங்
கண்ணு ளான்முத லவர்கடாங் கண்ணினொண் கனியாம்
பெண்ணு ளாரொடுங் கரம்பிடித் தாடினர் பெருநீர்
மண்ணு ளார்களுங் கரம்பிடித் தாடினர் மகிழ்ந்தே. (அ0)

1695 விலங்கல் யாவையும் வன்மரம் யாவையும் விலங்கின்
குலங்கள் யாவையுங் களித்துயிர் தளிர்த்தலுங் குன்றின்
புலங்கள் போய்மறைந் திட்டகூ ளியும்பொரு களத்துட்
கலங்கல் யாதுமொன் றின்றிவந் தெய்தின களித்தே. (அக)

வேறு.

1696 பொருகரித் தோலை யுரித்துமெய் முழுதும்
போர்த்துவெண் பிறையெனச் சடிலத்
தொருமருப் பினைவைத் தேனைவே டுவர்தம்
மோங்குவெண் டலைகரத் தேந்திச்
செருமுகத் திட்ட சூலமோர் கரத்திற்
செறித்துவெள் ளெலும்புகோத் தணிந்து
பருமிதக் கயிலை யாளிபோற் கூளிப்
படையுணின் றுடுவ சிலபேய். (அஉ)

1697 கொற்றவெஞ் சமரிற் பற்றியெற் றலினோர்
கோடிழந் தடுபடை யதனு
லற்றவண் கிடந்த களிற்றின்வன் றலையா
னனத்தமைத் தொருமருப் பொருகை

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	4	0
2.	கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33.	வேளிர்வரலாறு	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	0
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொ[illegible] பழையஉரையும் (முதல் 100 செய்)	1	0	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்	0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	0
51.	மதங்கசூளாமணி	1	0	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர்	0	6	0
	ஷெ ஆங்கிலத்தில்	0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 33 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன்தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநா[illegible]ணை[illegible]னேஜர்.